GEOGRAPHY

Madura District

OFFICE OF THE ...
13 SEP ...
MADRA...



E.M. GOPALAKRISHNA KONE

MADURA. MAD...

மதுரை ஜில்லா பூகோளம்

915.482 [1]
3228
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 SEP 1938
MADRAS
3155

மதுரை

P. சுந்தரராஜ ஐயங்கார், பி. ஏ., எல். டி.

அவர்கள் எழுதியது

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்

மதுரை : : சென்னை

1938

[ரிஜிஸ்தர் செய்தது] [விலை அணு 5

First Edition—1937
Reprinted — 1938

அட்டவணை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 SEP 1938
MADRAS.

பாடம்		பக்கம்
1.	பொது விபரம்	1
	படங்களும், பிளான்களும், திசை யறிதலும் ...	2
2.	இயற்கை யமைப்பு	4
3.	மதுரைமா நகரம்	8
4.	ஜில்லாவின் சுற்றுப் பிரயாணம்	15
	ரஸ்தா மார்க்கம்	16
5.	ரயில் பிரயாணம்	24
6.	மழையும் சீதோஷ்ணமும்	26
	நீர்ப்பாசனமும் விளைபொருள்களும்	27
7.	கைத்தொழில், வியாபாரம்	28
	ஏற்றுமதி, இறக்குமதி	31
8.	ஜனங்கள், மதம், பாஷை, கல்வி	32
9.	அரசாங்க முறை	33
10.	தாலூகாக்களும் முக்கிய ஊர்களும்	37
	மதுரைத் தாலூகா	37
	திருமங்கலம் தாலூகா	38
	பெரியகுளம் தாலூகா	39
	கொடைக்கானல் தாலூகா	40
	பழனித் தாலூகா	41
	திண்டுக்கல் தாலூகா	,,
	நிலக்கோட்டைத் தாலூகா	42
	மேலூர்த் தாலூகா	43
11.	மதுரை ஜில்லா சரித்திரச் சுருக்கம்	44
12.	உலக விஷயங்கள்	

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 SEP 1938
MADRAS

மதுரை ஜில்லா பூகோளம்

முதல் பாடம்

பொது விபரம்

பிள்ளைகளே! நாம் வசிப்பது எந்தத் தேசமென்று உங்களுக்குத் தெரியுமா? அதற்கு இந்தியா தேசம் என்பது பெயர். நாம் இந்தியாவின் தென் பாகத்தில் வசிக்கிறோம். நாம் வசிக்கும் பாகத்திற்குத் தென் இந்தியா என்பது பெயர். அதன் படத்தைப் பாருங்கள். அதன் வடிவம், முக்கோணம்போல அடிப்புறம் படத்தின் மேற் பக்கத்திலும், நுனி, அடிப் பக்கத்திலும் இருக்கின்றன.



திசைப் படம்

இப்படத்தின் நான்கு திக்குகளும் யாவை? படத்தைச் சுவரில் தொங்கவிட்டுப் பார்த்தால், மேற்பாகம் வடக்குத் திக்கையும், வலப் பாகம் கிழக்குத் திக்கையும், அடிப்பாகம் தெற்குத் திக்கையும் காட்டும். படத்தை நன்ருய்ப் பார்த்து, அதன் எல்லைகளைத் தெரிந்து கொள்ளுங்கள். வட பாகத்தில் நிஜாம் ராஜ்யம், மத்திய மாகாணங்கள், பீஹார் ஒரிஸாவும், மற்ற பாகங்களில் சற்றேறக்குறைய சமுத்திரமும் சூழ்ந்திருக்கின்றன.

இப்படத்தை நன்ருய்ப் பரிசிலனை செய்து பார்த்தால், இது அரசாட்சிக்



தென் இந்தியா படம்

காகப் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்

டிருப்பதைக் காணலாம். அதில் சென்னை ராஜதானி என்று பெயரிட்டிருக்கிற பாகத்தைக் கவனியுங்கள். அது இந்தியாவின் தெற்கிலும், தென் கிழக்கிலும் அமைந்திருக்கிறது. இதற்குச் சென்னை மாகாணம் என்பது பெயர். இவ்வாறு பல மாகாணங்கள் நமது தேசத்தில் இருக்கின்றன.

சென்னை மாகாணத்தின் தென் கிழக்குப் பாகத்தில் நாம் வசிக்கிறோம். அதற்கு மதுரை ஜில்லா என்பது பெயர். இம்மாதிரிப் பல ஜில்லாக்களைக் கொண்டது நம் சென்னை மாகாணம். நாம் இப்பொழுது கற்றுக்கொள்ளப் போவது நமது ஜில்லாவின் பூகோளம்.

படங்களும், பிளான்களும்

சிறுவர்களே! இப்படத்தைக்கவனியுங்கள். நமது ஜில்லாவானது இராஜ தானியின் கடைசியில் அமைந்திருக்கிற தென்பது தெரியும். வடக்கே கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களும், கிழக்கே திருச்சிராப்பள்ளி ஜில்லா, புதுக்கோட்டைச்சமஸ்தானம், இராமநாதபுரம் ஜில்லாவும், தெற்கே இராமநாதபுரம் ஜில்லாவும், மேற்கே திருவாங்கூர் சமஸ்தானமும் நமது ஜில்லாவுக்கு எல்லைகளாக உள்ளன.

பூகோளப் பாடங்கள் கற்றுக்கொள்ளுவதற்கு முதன் முதலில் முக்கியமாக நாம் தெரிந்து கொள்ள வேண்டியது நாம் படிக்கும் பாகத்தின் எல்லைகள் இன்னவை என்பதே. முன்னே கூறியவாறு படத்தைச் சுவரில் தொங்கவிட்டு, அதன் நான்கு திக்குகளிலும் உள்ள எல்லைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, ஒரு பூபாகத்தின் படத்தை எப்படி வரைவதென்று தெரிந்துகொள்ள வேண்டும். படங்களில்லாமல் தெரிந்து கொள்ளுவதைக் காட்டிலும், படங்களைப் பார்த்துப் பூகோள விஷயங்கள் கற்றுக்கொள்ளுவது சுலபமாயும், மனத்தில் நன்றாய்ப் பதியக் கூடியதாயுமிருக்கும்.

அதிகாலையில் சூரியன் உதிக்கும் திக்கை நோக்கி நின்றால், நான்கு திக்குகளையும் சுலபமாய்



அறியலாம். சூரியன் உதயமாகும் திசைதான் கிழக்கு. நமது முதுகுப்புறம் இருக்கும் திசை மேற்கு, வலக்கைப்புறம் தெற்கு. இடக் கைப்புறம் வடக்கு. இந்நான்கு திசைகளுக்கும்



திக்குப் படம்

இடையிடையே தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு என்னும் வேறு நான்கு திசைகளும் இருக்கின்றன. இத்திசைகளைச் சுலபமாய்த் தெரிந்துகொள்ள ஒரு கருவி

கண்டுபிடித்திருக்கிறார்கள். அதற்குத் "திசை காட்டும் கருவி" என்பது பெயர். திசை காட்டும் கருவி யென்பது ஆங்கிலத்தில் 'காம்பஸ்' (Compass) என்று சொல்லப்படும்.

நாமிருக்கும் ஊரோ, நமது ஜில்லாவோ, மிகவும் பெரிதாயிருந்த போதிலும், அதை நாம் காகிதத்தில் படமாக வரைந்து காண்பிக்கத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம். ஏனென்றால், பூகோள சாஸ்திரத்தைப் படிக்கப் படங்கள் இன்றி



திசைக் காட்டும் கருவிப் படம்.

யமையாதவை. ஒருவன் ஒரு வீடோ, அல்லது ஒரு சிறு குடிசையோ கட்ட வேண்டுமென்று உத்தேசித்தால், முதன் முதலில், அதற்கு நிலப்படம் (Plan) தயாரித்துக் கொள்ளுகிறான். அதாவது, வீட்டின் நான் கெல்லைகளையும், அதனுடைய நீளம், அகலம், உட்புறத்திலுள்ள அறை, கூடம், தாழ்வாரம் முதலியவற்றின் விஸ்தீரணங்களையும், அமைப்பையும், ஒருவன் நிலப்படமாகவரைந்து கொள்ளுகிறான். ஒரு ரப்பர்த்துண்டு, புஸ்தகம், கண்ணாடி முதலிய சிறு சாமான்களின் தரைப்படத்தைச் சுலபமாக வரைந்து விடலாம். கண்ணாடியை ஒருகாகிதத்தின் மேல்வைத்து, அதன் நான்கு மூலைகளையும் எழுதுகோலின் நுனியால் குறித்துப் பிறகு கண்ணாடியை எடுத்து விட்டுக் குறிப்பிட்ட நான்கு மூலைகளையும் சேர்த்துப் பார்த்தால், அது கண்ணாடியின் அளவாகும். ஒரு பெரிய பலகையின் தரைப்படத்தைக் காகிதத்தில் குறிப்பதென்பது முடியாத காரியம். அதற்காகப் பலகையின் அகல நீளத்தை அளந்து பார்க்கவேண்டும். அப்பலகை இரண்டடி நீளமும், ஒரு அடி அகலமும் இருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். காகிதத்தின் மேல் ஒரு அங்குலத்துக்கு ஒரு அடி வைத்துக்கொண்டு, அகல நீளங்களை வரைந்தால், அது அப்பலகையின் படமாகும்.

படம் வரையப் பட்டிருக்கும் காகிதத்தில் பின் வருமாறு குறித்து வைப்பது அவசியமாகும். இவ்



அளவு=ஒரு அடி=ஒரு அங்குலம்

வாறே நாம் வாசிக்கும் அறைகளின் தரைப் படத்தை வரைந்து, அதிலுள்ள ஜன்னல்கள், வாசற்படிகள், தூண்கள் ஆகிய இவைகளைக் குறித்துக் காட்டுங்கள்.



வாசிக்கும் அறைப் படம்

பயிற்சி

1. நாம் வசிப்பது எந்தத் தேசம்?
2. அதன் உட்பிரிவுகள் என்ன?
3. மதுரை ஜில்லா எந்த உட்பிரிவைச் சேர்ந்தது?

4. நமது ஜில்லா நம் தேசத்தின் எந்த இடத்தில் அமைந்திருக்கிறது ?
5. நான்கு திக்குகளை எப்படிக் கண்டு பிடிப்பாய் ?
6. ஒரு படத்தின் திசைகளை எப்படிக்கண்டு பிடிப்பாய் ?
7. நமது ஜில்லாவின் எல்லைகளென்ன ?
8. ஒரு புத்தகத்தின் பிளான் வரைகிற தென்றால் என்ன செய்வாய் ?
9. ஒரு வீட்டின் அகலம் 30 அடியும், நீளம் 60 அடியுமிருந்தால், அவ்வீட்டின் பிளானை எப்படி வரைவாய் ?
10. நீ வசிக்கும் ஊரிலுள்ள ஒரு பொதுவான கட்டடத்தின் பிளானை வரைந்து காட்டு.

இரண்டாம் பாடம்

இயற்கையமைப்பு

1. மலைகள்

நமது ஜில்லாவின் படத்தைப் பாருங்கள். மேற்கில், மேற்குத் தொடர்ச்சி மலைகள் இருக்கின்றன. இவை பெரும்பாலும் திருவாங்கூர் ராஜ்யத்தைச் சேர்ந்தவை. இதன் ஒரு பாகம் ஏலக்காய் மலைகள். இத் தொடரின் சில கிளைகள் நமது ஜில்லாவுக்குள் உள்ளன. அவைகளில் முக்கியமானவை பழனி மலைகள். இம்மலையின் ஒரு பாகமான கோடைக்கானல் மலைக்குத்தான் தனவந்தர்கள் தேக சௌக்கியத்திற்காகக் கோடைக்காலத்தில் போய் வருகிறார்கள். இவைகளுக்கடுத்தவை வருஷநாடு, ஆண்டிபட்டி மலைகள். வருஷநாடு, ஆண்டிபட்டி என்னும் இரண்டு ஊர்களை அடுத்திருப்பதால் இவற்றிற்கு அப்பெயர் வந்தது. இவைகளுக்குத் தென் கிழக்காகத் திரும்பியபின் நாகமலை என்பதுபெயர். பழனி மலைகளுக்குக் கிழக்கில் சிறு மலையும், அழகர் மலையும் இருக்கின்றன. சிறுமலையில் பயிராகும் வாழைப் பழங்கள் அதிகப் பேர் போனவை.

2. பீடபூமி

உயர்ந்தபூமிக்குப் பீடபூமிஎன்பது பெயர். மேல் பழனி மலைகளுக்கும் கீழ்ப்பழனி மலைகளுக்கும் இடையே ஒரு பீடபூமி இருக்கிறது. அதில் ஒரு கிராமம் உண்டு. அதற்குப் பண்ணைக்காடு என்பது பெயர்.

3. ஆறுகள்

பிள்ளைகளே! படத்தைப் பாருங்கள். அதில் பாயும் ஆறுகள் எவை? இந்த ஜில்லாவில் பாயும் நதிகளில் முக்கியமானது வைகை. இது வருஷநாடு, ஆண்டிபட்டி மலைகளில் உற்பத்தியாகி, வடகிழக்காய் ஓடிப் பிறகு தென்கிழக்காய்த் திரும்பி, மதுரை வழியாக இராமநாதபுரம் ஜில்லாவில் பிரவேசித்துக் கடலில் வீழ்கிறது. மழைக்காலத்தில் இதில் தண்ணீர் வெகு வேகமாகச் செல்லுவதால், வைகைக்கு வேகவதி என்ற ஒரு பெயரும் உண்டு.

வைகையின் உப நதிகள் நான்காகும். அவை (1) சுருளிநதி, (2) தேனி நதி, (3) வராகநதி, (4) மஞ்சள் நதி என்பனவாம். இவைகளில் முக்கியமானது சுருளி நதி. இது உற்பத்தியாகும் இடத்தைப் பாருங்கள். அந்த இடத்திற்குக் கம்பம் பள்ளத்தாக்கு (கம்பம்வாலி) என்பது பெயர். சுருளிநதி எந்த இடத்தில் வைகை நதியுடன் சேருகிறது என்று பாருங்கள். தேனிக்கு அது தென்கிழக்கில் வைகைநதியுடன் சேருகிறது.

ii. பெரியாறு:— இது திருவாங்கூர் ராஜ்யத்தில் ஒருவருக்கும் உதவாமல் காட்டு வழியாய் ஓடிக்கொண்டிருந்தது. சுமார் 45 வருஷங்களுக்கு முன், பென்னிங்விக் என்பவரது விடாமுயற்சியால் அதற்கு ஓர்

மதுரை ஜில்லா

கோயம்புத்தூர் ஜில்லா
திருச்சிராப்பள்ளி ஜில்லா
புதுக்கோட்டை சமஸ்தானம்
திருவாங்கூர் சமஸ்தானம்
இராமநாதபுரம் ஜில்லா
பழனி தாலுகா
திண்டுக்கல் தாலுகா
கொடைக்கானல் தாலுகா
நிலக்கோட்டை தாலுகா
மேலூர் தாலுகா
பெரியகுளம் தாலுகா
மதுரை தாலுகா
திருமங்கலம் தாலுகா
அழகர் மலை
யானை மலை
பசுமலை
திருப்பரங்குன்றம் மலை
பேரணை
பெரியாறு கால்
வைகை நதி
தேனி ஆறு
வராக நதி
கம்பம் வாலி
சுருளி நதி
பெரியாறு
வ
மே
கி
தெ
மலைகள்
நதிகள்
தாலுகா எல்லைகள்

அணை கட்டி, அந் நீரைத் தேக்கி, நிலங்களில் பாய்ச்ச ஏற்பாடு செய்யப்பட்டது.

அணை கட்டித் தேக்கிய தண்ணீரை மலையில் புதிதாய்த் துளைத்த ஒரு சுரங்கத்தின் வழியாய் விரவனூறு மூலம் சுருளி ஆற்றில் கலக்கும்படி ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறது. அந்தத் தண்ணீர் முழுவதும் வைகை ஆற்றின் வழியாய்ச் சென்று விடாமல், நிலக்கோட்டைத் தாலூகாவிலுள்ள அணைப்பட்டி என்னும் கிராமத்துக்கு அருகில் பேரணைஎன்ற ஓர் அணையிலிருந்து பிரிக்கப்படுகிறது. அங்கிருந்து வரும் நீர்தான் 12 சிறு கால்வாய்களின் மூலம், நிலக்கோட்டை, மதுரை, மேலூர் தாலூகாக்களிலுள்ள நிலங்களுக்குப் பாய்ச்சப்படுகிறது.

இந்த ஏற்பாட்டினால் அநேக புன்செய்களை நன்செய்களாக மாற்றி விட்டார்கள். இப்பொழுது பயிர்கள் நன்றாய் விளைகின்றன. சர்க்காருக்கும் அதிகத் தீர்வை கிடைக்கிறது. தரிசு நிலங்கள் செழிப்பு நிலங்களாகி விட்டன.

iii. குண்டாறு:—ஆண்டிபட்டிமலையில் கிழக்குப் பாகத்தில் உற்பத்தியாகித் தென்கிழக்காய்த் திருமங்கலம் தாலூகா வழியாக ஓடி, இராமநாதபுரம் ஜில்லாவில் புகுந்து கடலில் விழுகிறது. இதில் மழைக்காலத்தில் தான் ஜலம் ஓடும்.

iv. ஷண்முக நதி:—இது பழனி மலைகளில் உற்பத்தியாகி, வடக்கு முகமாக ஓடிக் காவிரியின் உபநதியான அமராவதியில் கலக்கிறது.

v. குடவனாறு:—சிறு மலையில் இந் நதி உற்பத்தியாகி, வடக்கு நோக்கி ஓடிக் காவிரியில் கலந்து விடுகிறது. இது நீர்ப்பாசனத்துக்கு ஏற்றதன்று ஏன்? மழைக்காலத்தில்தான் ஜலம் ஓடும்.

vi. வரிசிலை ஆறு:—இது இந்த ஜில்லாவில் வடபாகத்தில் உற்பத்தியாகி, மேலூர்த்தாலூகாவில் பாய்ந்து இராமநாதபுரம் ஜில்லா வழியாய் ஓடிக் கடலில் விழுகிறது.

ஆறுகள், கணவாய்கள் இல்லாத விடங்களில் கிணறுகளைத் தோண்டிக்கொண்டு, உழவர்கள் நன்செய் புன்செய் நிலங்களில் சாகுபடி செய்கிறார்கள். நமது ஜில்லாவின் மூன்றில் ஒருபாக நிலம் கிணற்று ஜலம் பாய்ச்சிச் சாகுபடி செய்யப்படுகிறது.

4. சமவெளிகள்

மேற்கூறிய மலைப் பிரதேசம், பீடபூமிப் பிரதேசம், இவைகளைத் தவிர மற்ற இடங்களெல்லாம் சமவெளிப் பிரதேசங்களாகும். இப் பிரதேசங்கள் சமுத்திர மட்டத்துக்கு மேல் சற்று உயரமாக இருக்கின்றன. ஆகையால், இப்பிரதேசங்களைச் சமவெளிகள் என்றே சொல்லவேண்டும். இப் பிரதேசத்திலுள்ள பெரும்பாலான நிலங்கள் சாகுபடிக்குத் தகுதியான நன்செய், புன்செய் நிலங்களே.

5. காடுகள்

ஜமீன்களுக்குச் சொந்தமாயுள்ள சில காடுகள், சிறு மலையிலும், பழனி மலையிலும், ஆண்டிபட்டி மலையிலும் இருக்கின்றன. சர்க்காருக்குச் சொந்தமாயுள்ள காடுகள், சிறு மலை, அழகர்மலை, நத்தம் மலை, பழனிமலைகளில் உள்ளன. இதில் முக்கியமான பெரிய காடுகள் இரண்டுண்டு. அவை யாவன : (1) கோம்பையிலிருந்து தெற்கே கம்பம் பள்ளத்தாக்கு வரையில் ஒரு இருண்டகாடு,

(2) இதற்குக் கிழக்கே உள்ள மேலக் கூடலூர், வண்ணத்திப் பாறை என்ற காடு.

மதுரை ஜில்லாவின் விஸ்தீரணம்:- மதுரை ஜில்லாவின் பரப்பு 4,916 சதுரமைல் என்று கணக்கிட்டு இருக்கிறார்கள்.

பயிற்சி.

1. மதுரை ஜில்லாப் படம் வரைந்து, மலைகளைக் குறிப்பிடு.
2. மதுரை ஜில்லாப்படம் வரைந்து, முக்கிய நதிகளைக் குறிப்பிடு. பேரணையைக் குறி.
3. கோடைக் காலத்தில் ஜனங்கள் தேக சௌக்கியத்தை முன்னிட்டு எந்த மலைக்குச் செல்லுகிறார்கள்? ஏன்?
4. உலகப் பிரசித்தியான வாழைப்பழம் எம் மலையில் கிடைக்கிறது?
5. நமது ஜில்லாவிலுள்ள முக்கிய நதி எது? முக்கிய கிளை நதி எது?
6. பெரியாறு அணைக்கட்டினால் ஏற்பட்ட நற்பலன்கள் என்ன?
7. சில ஆறுகள் நீர்ப் பாசனத்திற்கும் பிரயோஜனமில்லை. ஏன்?
8. சர்க்காருக்குச் சொந்தமான இரண்டு பெரிய காடுகள் யாவை?
9. மதுரை ஜில்லாவில் உள்ள நிலங்களில் எவ்வளவு பாகம் கிணற்று நீர் பாய்ச்சிச் சாகுபடி செய்யப்படுகிறது?
10. பெரியாற்றில் ஓடின ஜலத்தை நிலங்களுக்குப் பிரயோஜனப்படும்படி கவர்ன்மெண்டார் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்?

மூன்றாம் பாடம்

மதுரைமா நகரம்

நமது ஜில்லாவுக்கு முக்கிய பட்டணம் மதுரை நகர் ஆகும். இது வைகையாற்றின் கரையில் இருக்கிறது. மதுரைக்குப் பல திக்குகளிலி



மதுரை டவுன்.

ருந்தும் இருப்புப் பாதை மூலமாகவும், ரஸ்தா மூலமாகவும் வந்து சேரலாம்.

ஒரு மோட்டாரில் ஏறி ஊரைச் சுற்றிப் பார்ப்போம். மீனாட்சி அம்மன் கோவில் இந் நகரின் நடுவில் இருக்கிறது. சுமார் 150 அடி உயரமுள்ள நாலு கோபுரங்கள் இதன் நாலு வெளி வாசல்களிலும் இருக்



பொற்றாமரைக் குளம்

கின்றன. கோவிலின் உள்ளேயுள்ள சித்திரப் பதுமைகளும், கற் சிலை

மதுரை நகரம்



1. ரேஸ் கோர்ஸ்
3. சொக்கி குளம்
9. அமெரிக்கன் காலேஜ்
10. தமுக்கம் ரோட் டப்பரின் பார்க்
11. கலெக்டர் பங்களா
12. தல்லாகுளம் கண்வாய்
14. மதுரை ஜில்லாபோர்டு ஆபீஸ் மதுரை வைகையாறு, பாலம்
18. கோச்சடை பம்பிங் ஸ்டேஷன்
19. ஆரப்பாளயம் பம்பிங் ஸ்டேஷன்
22. ராஜாமில்
25. ஹார்விமில்
26. ரயில்வே ஸ்டேஷன்
28. பசுமலை
29. மதுரைக் காலேஜ்
31. கூடலழகர் கோவில்
32. கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரி
33. மதுரை மீனாக்ஷி கோவில்
35. திருமலை நாயக்கர் மஹால்
36. அவனியாபுரம்
39. பாண்டியன் மில்
43. மாரியம்மன் தெப்பக்குளம்

களும் கண்களைக் கவருகின்றன. ஆயிரக்கால் மண்டபம், அழகிய கற் பதுமைகளுள்ள தூண்களால் நிறைந் திருக்கின்றது. பொற்று மரைக் குளம் என்ற புண்ணிய தீர்த் தமும், கலியாண மண்டபமும் மிக வும் அழகாய் அமைந்திருக்கின்றன.

கோயிலைச் சுற்றிலும் நான்கு பக் கங்களிலும் வீதிகள் இருக்கின்றன. அவைகள், சித்திரை வீதி, ஆவணி மூல வீதி, மாசி வீதி, வெளி வீதி என்பன.



புதுமண்டபம்

கிழக்குக் கோபுர வாயில் வழி யாய்க் கிழக்குச் சித்திரை வீதிக்குப் போவோம். புது மண்டபத்தைப் பார். அங்கே அநேக புஸ்தகக் கடைகளும், பாத்திரக் கடைகளும், ஜவுளிக் கடைகளும் இருக்கின்றன. இதன் நடுப்பத்தியில் உள்ள தூண் களில் மதுரையை முன் காலத்தில் ஆண்ட நாயக்க மன்னர்களின் சிலை களைக் காணலாம். அவற்றில், திரு மலை நாயக்கர் சிலையைப் பார். இம்மண்டபம் அவரால் கட்டப் பெற்றது.

தெற்குச் சித்திரை வீதிக்கு வரு வோம். அங்கே திருமலை நாயக்கரால் கட்டப்பட்ட ஒரு கட்டிடம் இருக் கிறது. அதில் அநேக கச்சேரிகள் இருக்கின்றன.

இப்பொழுது மேலச் சித்திரை வீதிக்கு வருவோம். இங்கு ஜவுளிக் கடைகளும், வெள்ளிப் பாத்திரக் கடைகளும் விசேஷமா யிருக்கின் றன.

அங்கிருந்து வடக்குச் சித்திரை வீதிக்கு வருவோம். இங்கே மருந்து ஷாப்புகளும், புஸ்தக ஷாப்புக ளும், வெங்கலக் கடைகளும் இருக் கின்றன. மங்கம்மாளின் பழைய அரண்மனையைப் பார். அதில் இப் பொழுது ஸெண்ட்ரல் மார்க்கெட் டும், போஸ்டாபீசும், இஞ்சினீயர் ஆபீசும் இருப்பதைக் காணலாம்.



ஹால் பார்க்

அதற்கு எதிரில் ஹால்பார்க் என் னும் சிங்காரத் தோட்டம் இருக் கிறது. ஜனங்கள் இங்கு மாலையில் நல்ல காற்று வாங்க வருகிறார்கள். இங்கே, ஜனங்கள் ஸ்நானம் செய்ய வும், மலம், ஜலம் கழிக்கவும் வசதி செய்யப்பட் டிருக்கிறது. அசுத்த ஜலம், பூமிக்குள்ளே செல்லும் பாதாளச்சாக்கடை வழியாய் நகருக்கு வெளியே கொண்டு போகப்படுகிறது.

அங்கிருந்து கீழாவணி மூல வீதிக்கு வருவோம். இங்குக் கடை களையும் அழகிய வீடுகளையும் பார். இங்கே இராயகோபுரம் இருக்கி

றது. இக்கோபுரம் முழுவதும் கட்டி முடிந்திருந்தால் உலகத்திலுள்ள கோபுரங்கள் எல்லாவற்றிலும் பெரிதாகச் சிறந்து விளங்கும். இது திருமலை நாயக்கரால் கற்களாலேயே கட்டப்பெற்றுள்ளது.

தெற்கு ஆவணி மூல வீதியில் உள்ள திருஞான சம்பந்தர் மடத்தைப் பார்த்தோம்.

பின்னர், மேல ஆவணிமூல வீதியிலுள்ள எட்வர்டு பார்க் என்னும் சிங்காரத் தோட்டத்தைப் பார்.

அங்கிருந்து வடக்கு ஆவணிமூல வீதிக்கு வருவோம். இங்கே, முனிஸிபல் ஆஸ்பத்திரி இருக்கிறது. ஆவணி மாதத்தில் நடைபெறும் பிட்டுத்திருவிழாக் காலத்தில் சுவாமி இந்த நான்கு ஆவணிமூல வீதிகளின் வழியாய் வருவது வழக்கம். இப்பொழுது ஆவணி மூல வீதிகளைச் சுற்றியாய் விட்டது.

கீழ மாசிவீதிக்கு வருவோம். இங்குள்ள சிங்காரத்தோட்டத்தைப் பார். இங்கே, எங்குப் பார்த்தாலும் கடைகள் காணப்படுகின்றன. மூங்கில் கடைகள், இரும்புக் கடைகள், பல சரக்குக் கடைகள், பழக்கடைகள், புஷ்பக்கடைகள், ஜவுளிக் கடைகள் இவைகளைப் பார்க்கலாம். இங்கே இரண்டு தேர்கள் நிற்கின்றன. சித்திரைத் திருவிழாவில் மீனாட்சிசுந்தரேசுவரர் இத்தேர்களில் நான்கு மாசி வீதிகளிலும் வருவது வழக்கம்.

பிறகு, தெற்குமாசி வீதிக்குத் திரும்புவோம். இங்கே, பெரிய விளக்குத் தூண் இருக்கிறது. இரவில் இதன் வெளிச்சத்தில் சில்லரை வியாபாரிகள் ஜவுளி வியாபாரம் செய்கிறார்கள்.

இங்கிருந்து மேல மாசி வீதிக்கு வருவோம். இதன் தென்மேற்குமூலையில் கூடலழகர் கோவிலும், நன்மை தருவார் கோவிலும் இருப்பதைப் பார்.

அங்கிருந்து வடக்கு மாசி வீதிக்கு வருவோம். இங்கே, யாதவர்களின் கிருஷ்ணன் கோவில் இருப்பதைக் காணலாம்.

அங்கிருந்து கீழவெளி வீதிக்கு வருவோம். இங்கே, நெல் பேட்டைகளும், மார்க்கெட்டும், ஸெயிண்டு மேரி மாதாகோவிலும், ஸெயிண்டு மேரி ஹைஸ்கூலும் இருக்கின்றன. இவ்வீதியில் மிஷன் ஆஸ்பத்திரி ஒன்று இருக்கிறது. அதில் நூதன முறையில் வைத்தியம் செய்கிறார்கள். மேல் பக்கத்திலுள்ள முனிஸிபல் ஆபீஸைப் பார். அதை அடுத்துத் திருமலை நாயக்கர் மஹால் இருக்கிறது. இது ஒரு பெரிய கட்டிடம்.



திருமலை நாயக்கர் மஹால்.

இங்குள்ள ஆகாய மளாவிய தூண்களைப் பார். இதில் இராமநாதபுரம் ஜில்லா, மதுரை ஜில்லா செஷன்ஸ் கோர்ட்டுகளும், அநேக கச்சேரிகளும் இருக்கின்றன. இது நமது தேசத்திலுள்ள சிறந்த கட்டிடங்களில் ஒன்று. இதைப் பல தேசங்களின் ஜனங்களும் வந்து பார்த்து மகிழ்ச்சி யடைகிறார்கள்.

பிறகு, தெற்கு வெளி வீதிக்கு வருவோம். இங்கே, முனிஸிபல் மாடல் ஸ்கூல் இருக்கிறது. கல்வி கற்றல், நீந்துதல், பலவிதக் கைத்தொழில்களைப் பழகுதல், இந்தப் பள்ளிக்கூடத்தில் கற்றுக் கொடுக்கிறார்கள்.

அங்கிருந்து மேலவெளி வீதிக்குச் செல்லுவோம். அங்கு கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரியைக் காணலாம். யு. ஸி. ஹைஸ்கூல், எ. ஆர். ஹைஸ்கூல் இவைகளைப் பார்த்துவிட்டு, எட்வர்டு ஹாலுக்கு வருவோம். இங்கு ஒரு இலவசப் புத்தகசாலை இருக்கிறது. இதில் அநேகர் வந்து பத்திரிகைகளையும் புத்தகங்களையும் படித்துக்கொண் டிருப்பார்கள். சற்றுத் தூரத்தில் மங்கம்மாள் சத்திரம் இருக்கிறது. அதில் வாடகை கொடுத்து, வெளியூர் வாசிகள் தங்குவார்கள். அதற்கு அருகில் குஜராத்திகள் சத்திரம் ஒன்று இருக்கிறது.

அங்கிருந்து வடக்கு வெளி வீதிக்கு வருவோம். அங்கு ஜெனரல் போஸ்ட் ஆபீஸையும், அதற்குச் சமீபத்தில் சேதுபதி ஹைஸ்கூலையும் பார்க்கலாம். இவ்வீதியில் காலஞ் சென்ற ஸ்ரீமான் பாண்டித்துரைசாமித் தேவரவர்களால் ஏற்படுத்தப்பட்ட தமிழ்ச் சங்கம் இருக்கிறது. இங்கு அநேக ஏழை மாணவர்களுக்குச் சாப்பாடு கொடுத்துத் தமிழ்க்கல்வி கற்பிக்கிறார்கள். இதில் படித்த அநேகர் சிறந்த தமிழ்ப் புலவர்களாக விளங்குகிறார்கள்.

அங்கிருந்து மேற்கே ஹார்வி மில் என்ற பஞ்சாபீசுக்கு வருவோம். இதில் பல ஆயிரக்கணக்கான ஜனங்கள் வேலை செய்கிறார்கள். இயந்திரங்களினால் நூல் நூற்கும் விந்தையைப் பார். இங்கே நூற்கும் நூல் மதுரையிலுள்ள நெசவுக்காரர்களுக்கு விற்கப்



ஹார்வி மில்.

படுவதோடு வெளியூர்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

அப்பால், ஆரப்பாளையம், கோச்சடை பம்பிங் டேஷன்களுக்குப் போவோம். இங்கே இயந்திரம் வைத்து, வைகை ஆற்று ஜலத்தைக் கிணற்றிலிருந்து இறைத்துக் குழாய்களின் மூலமாய் அந்த ஜலம் மதுரை வாசிகள் உபயோகத்திற்காகக் கொண்டு போகப்படுகிறது.

பம்பிங் ஸ்டேஷன்களைப் பார்த்தோம். வரும் வழியில் பெண்கள் டிரெயினிங் ஸ்கூல் இருப்பதைப் பார். இதனருகில் ராஜாமில் என்ற பஞ்சாபீசைக் காணலாம்.

அதிலிருந்து கிழக்கே சென்று



வைகையாற்றுப் பாலம்.

வடக்கே திரும்புவோம். அங்கே வை

கையாறு ஓடுகிறது. வைகை ஆற்றை யும் பாலத்தையும் பார். ஆற்றைக் கடக்கப் பாலத்தின் வழியே செல்லு வோம். ஆற்றின் வடகரையில் மதுரை ஜில்லா போர்டு ஆபீஸ் கட் டிடம் தெரிகிறது. இது மிகவும் அழகான கட்டிடம். அதற்கும் வடக் கில் உள்ள அமெரிக்கன் காலே ஜைப் பார். இங்கே ஒரு மிஷன் ஹைஸ்கூலும் இருக்கிறது.

இனித் தமுக்கம் செல்லுவோம். அங்கே டப்பரின் பார்க் என்ற ஒரு சிங்காரத் தோட்டம் இருப்பதைப் பார். பக்கத்தில் ஒரு பங்களா இருக் கிறது. அதில் இப்பொழுது மதுரை ஜில்லா கலெக்டர் வசித்து வருகிறார். இக்கட்டிடம் திருமலை நாயக்கரால் தமது கோடைக்கால வசதிக்காகக் கட்டப் பெற்றது. இக்கட்டிடத்தை ஆற்காட்டு நவாபு, தாம் ஆண்ட காலத்தில் ஒரு துரைக்கு இனா மாகக் கொடுத்தார். அந்தத் துரை இதன் வாடகையைப் படிப்புக் குச் செலவு செய்யும்படி சர்க்கா ருக்கு அநுமதி கொடுத்தார். இதன் வாடகையில் ரூ. 480, வருடந்தோ றும் சென்னை யுனிவர்ஸிடிக்குச் சர்க் கார் அனுப்புகிறார்கள்.

இதற்குப் பக்கத்தில் மிருக வைத் தியசாலையும் இருக்கிறது. சற்றுத் தூரத்தில் தாலூகாக் கச்சேரியும், மதுரை இராமநாதபுரம் ஜில்லாக் கலெக்டர்கள் ஆபீசுகளும் இருக் கின்றன.

அப்பால், தல்லாகுளம் என்ற பெரிய கண்வாய் தெரிகிறது. அதற் கும் வடக்கில் ரேஸ்கோர்ஸ் என்ற மைதானம் இருக்கிறது. அங்கே யுள்ள சிங்காரத் தோட்டத்தைப் பார். இதில் நமது நகர ஜனங்கள் மாலையில் வந்து நல்ல காற்று வாங்குவார்கள்.

இதற்குச் சற்று மேற்கே செல் லுவோம். இங்கு ஒரு குளம் காணப்படுகிறது. இதைச் சொக்கி குளம் என்று சொல்லுவார்கள். இங்கே பெண் பிள்ளைகளுக்கான மிஷன் ஹைஸ்கூல் இருக்கிறது. இந்த இடத்தில் புதிதாக அநேக பங்களாக்கள் கட்டிக்கொண்டு ஜனங் கள் வசிக்கிறார்கள்.

தல்லா குளத்திலிருந்து ரஸ்தாக் கள் நான்கு பிரிவாகப் பிரிகின்றன. ஒரு ரஸ்தா வடக்காக நத்தத்துக்கும், ஒரு ரஸ்தா வடகிழக்காக அழகர் கோவிலுக்கும், ஒரு ரஸ்தா மேலூ ருக்கும், மற்றொரு ரஸ்தா கிழக்காகச் சிவகங்கைக்கும் செல்லுகின்றன.

இனி ஆற்றுப் பாலத்தைக் கடந்து, திரும்பி வந்து, கிழக்கே செல்லுவோம். வழியில் சௌராஷ் டிர ஹைஸ்கூலையும், அதற்குச் சமீ பத்தில் பனியன்கள் நெசவு செய்யும் தொழிற்சாலையையும் காணலாம். அதற்கும் கிழக்கில் மாரியம்மன் தெப் பக்குளம் என்ற ஒரு பெரிய தெப்பக் குளம் இருக்கிறது. இது திருமலை நாயக்கரால் சுற்றிலும் கற்களில் மிக்க அழகாகக் கட்டப் பெற்றது. இதன்



பெரிய தெப்பக் குளம்.

மத்தியில் அழகான மண்டபமும், அதில் சிங்காரத் தோட்டமும் இருக் கின்றன. இதன் வடகிழக்கு மூலையில் மாரியம்மன் கோவில் இருக்கிறது. இங்கிருந்து ஒரு ரஸ்தா கிழக்காக இராமநாதபுரத்துக்குச்செல்லுகிறது.

தெப்பக் குளத்திலிருந்து தென் மேற்காக மதுரைக்குத் திரும்பி வருவோம். பாதையில் ஒரு பெரிய ஆலமரம் தெரிகிறது. அதன் நிழல் வெகுதூரம் பரவிக் குளிர்ச்சியா யிருக்கிறது. சற்றுத்தூரத்தில் பாண்டியன் மில் என்ற பஞ்சு ஆபீஸைப் பார். அங்கிருந்து மேற்காக வந்தோமானல், மதுரைக் காலேஜும், மீனாக்ஷி மில் பஞ்சாபீசும் காணப்படுகின்றன. நகரின் தென்பாகத்தில் ஸெளராஷ்டிரர்கள் ஏராளமாக வசிக்கிருர்கள். இவர்களில் பெரும்பான்மையோர் நெசவுத் தொழிலும், சாயத்தொழிலும் செய்பவர்கள். இந் நகரில் நூற்கப்படும் நூலால் நெய்யப்படும் சரிகை வஸ்திரம், சாய வஸ்திரம், பட்டு வஸ்திரம், இங்கே செய்யப்படும் வெங்கலப் பாத்திரம் முதலியன வெளி ஊர்களுக்கு ஏற்றுமதியாகின்றன.

நகரத்தின் மத்தியில் ஆரம்பப் பாடசாலைகள் பல இருக்கின்றன. சிங்காரத் தோட்டங்களும், எலெக்டிரிக் விளக்குகளும், தார் போட்ட ரஸ்தாக்களும் நகரை அலங்கரித்துள்ளன. இயற்கையிலேயே இந்நகரம் மிக்க அழகு வாய்ந்தது. வியாபாரம் கைத்தொழில் முதலிய வற்றில் மேன்மை பெற்றது. ஜனங்களும் ஏராளமாக வசிக்கிருர்கள். இங்குள்ள ஜனத்தொகை 1931-ம் வருஷ சங்கியைப்படி 1,82,018. இதனுல் இதை நமது இராஜதானியாகிய சென்னை நகரத்துக்கு இரண்டாவதாகச் சொல்லுகிருர்கள்.

பயிற்சி.

1. மதுரை எந்த ஆற்றின் கரையில் இருக்கிறது?
2. மீனுட்சி அம்மன் கோவிலில் பார்க்கத்தக்க பாகங்கள் எவை?
3. மங்கம்மாள் வசித்து வந்த பழைய அரண்மனையில் இப்பொழுது என்ன இருக்கிறது?
4. இராய கோபுரம் எந்த வீதியில் இருக்கிறது?
5. இது யாரால் கட்டப்பட்டது?
6. கீழ வெளி வீதியிலுள்ள பார்க்கத்தகுந்த கட்டிடங்களைச் சொல்லு.
7. திருமலை நாயக்கர் மஹாலில் இருக்கும் கச்சேரிகள் எவை?
8. ஏன் பலர் இதைப் பார்க்க வருகிருர்கள்?
9. தமிழ்ச் சங்கம் எந்த வீதியிலிருக்கிறது? இது யாரால் ஸ்தாபிக்கப்பட்டது?
10. மதுரை வாசிகளுக்குக் குடிக்கும் ஜலம் எவ்வாறு கொண்டுவரப் படுகிறது?
11. தமுக்கம் யாரால் கட்டப்பட்டது?
12. அது எதற்காகக் கட்டப்பட்டது?
13. அது தற்காலத்தில் எவ்வாறு உபயோகிக்கப்படுகிறது?

நான்காம் பாடம்

ஜில்லாவின் சுற்றுப் பிரயாணம்

சிறுவர்களே, இந்த ஜில்லாவின் முக்கியமான தோற்றங்களை ஒருவன் அறிய விரும்பினல், அதைச் சுற்றிப் பார்ப்பது அவசியமாகிறது. அப்படிப் பிரயாணம் செய்வதற்குப் பல வசதிகள் இருக்கின்றன. அவை யாவன (1) கடல் மார்க்கம், (2) சாலை மார்க்கம், (3) இருப்புப் பாதை மார்க்கம்.

நமது ஜில்லாவுக்குக் கடற்கரை இல்லாததால், கடலின் மூலம் போக்கு வரவு இல்லை. நாம் சாலைகள். மார்க்க மாகவும், ரயில் மார்க்க மாகவும் நமது ஜில்லாவைச் சுற்றிப் பார்க்கலாம். நமது ஜில்லாவில் பெரிய ரஸ்தாக்களும், கிளை ரஸ்தாக்களும் அநேகம் இருக்கின்றன. பெரிய ரஸ்தாக்களின் நீளம் 1210 மைல். இருப்புப் பாதை நமது ஜில்லாவில் தெற்கு வடக்காகச் சுமார் 100 மைலும் கிழக்கு மேற்காகச் சுமார் 70 மைல் தூரமும் செல்லுகிறது.



மோட்டார்கார்.

ரஸ்தா மார்க்கம்.

மதுரையிலிருந்து தெற்கேபோகும் ரஸ்தாவில் மோட்டார் காரில் ஏறிச் செல்லுவோம். சுமார் 2 மைல் தூரத்திலுள்ள அவனியாபுரம் வந்து சேருவோம். இதன் பக்கத்தில் மதுரை முனிசிபாலிட்டியாரால் நடத்தப்பெறும் விவசாயப் பண்ணையைப் பார்க்கலாம். இப்பண்ணையில் மதுரையில் கழிவாகும் சாக்கடைத் தண்ணீரைப் பாதாளச் சாக்கடைக் குழாய்கள் மூலம் கொண்டுவந்து சாகுபடி செய்கிறார்கள். ஏராளமாய்க் காய் கறிகளும், பயிர் பச்சைகளும், மாடுகளுக்கு நல்ல பால் தரும் உணவாகிய 'கினிகிராஸ்' என்ற புல்லும் விளைகின்றன. இதனால் இங்குள்ள குடிகள் நல்ல லாப மடைகிறார்கள். இந்த ரஸ்தா நேராக அறுப்புக் கோட்டைக்குச் செல்லுகிறது.

திரும்பவும் மதுரைக்கு வந்து, தென்மேற்காய்ச் செல்லும் ரஸ்தாவில் செல்லுவோம். வழியில் அரசாங்கத்தாரால் நடத்தப் பெறும் தொழிற் கல்விச்சாலையைப் பார். இதில் மாணவர்களுக்கு இரும்பு வேலையும், மரவேலையும், மற்ற இயந்திர வேலைகளும் கற்றுக்கொடுக்கிறார்கள். பின் சுமார் 2மைல் தூரத்திலுள்ள பசுமலை வந்து சேர்வோம். அங்குக் குன்றென்று தெரிகிறது பார். குன்றின் மேலும், அடிவாரத்திலும் அமெரிக்க கிறிஸ்துவப் பாதிரியார்கள் வசிக்கின்றனர். இங்கே ஒரு ஹைஸ்கூலும், டிரெயினிங் ஸ்கூலும், மஹாலக்ஷ்மி மில் என்ற பஞ்சு இயந்திரசாலையும் இருப்பதைப் பார்.

அப்பால், திருப்பரங்குன்றம் செல்லுவோம். இது ஒரு சுப்பிரமணியர் ஸ்தலம். இந்த ரஸ்தாவில் நேராகச் சென்று திருமங்கலம் என்னும் ஊரை அடைவோம். அங்கிருந்து தெற்காகக் கள்ளிக்குடி, சாத்தூர்மார்க்கம் திருநெல்வேலிக்குச் செல்லுகிறது.

மதுரைஜில்லா
கோயம்புத்தூர் ஜில்லா
திருச்சிராப்பள்ளி ஜில்லா
திருவாங்கூர் சமஸ்தானம்
புதுக்கோட்டை சமஸ்தானம்
இராமநாதபுரம் ஜில்லா
பழனித்தாலுகா
கொடைக்கானல் தாலுகா
திண்டுக்கல் தாலுகா
நிலக்கோட்டை தாலுகா
மேலூர் தாலுகா
பெரியகுளம் தாலுகா
திருமங்கலம் தாலுகா
மதுரை தாலுகா
பழனி
திண்டுக்கல்
நத்தம்
கொட்டாம்பட்டி
மேலூர்
சமயநல்லூர்
உசிலம்பட்டி
ஆண்டி பட்டி
சின்னமனூர்
உத்தமபாளையம்
கம்பம்
திருமங்கலம்
பேரையூர்
கல்லுப்பட்டி
கொடைக்கானல்
கொடைக்கானல்ரோடு
அம்பாத்துரை
பலக்கனூத்து
அய்யலூர்
பெரியகுளம்
வ
மே
கி
தெ
இருப்புப்பாதை
வண்டிப்பாதை
தாலுகா எல்லை

அதன் ஒரு கிளை கல்லுப் பட்டி வழியாய் ஸ்ரீவில்லி புத்தூருக்கும், கல்லுப்பட்டியிலிருந்து மற்றொரு கிளை, பேரையூர், சாப்டூர் முதலான ஊர்களுக்கும் செல்லுகின்றன.

இந்த ரஸ்தாக்களின் இரு புறங்களிலும், பூமி சில இடங்களில் செம்மண் நிலமாகவும், சில இடங்களில் கரிசல் நிலமாகவும் காணப்படுகின்றது. இவற்றில் கம்பு, சோளம், துவரை, உளுந்து, நிலக்கடலை, பருத்தி முதலியவைஏராளமாகப் பயிராகின்றன. இப் பயிர்களுக்கு வேண்டிய ஜலம் ஆழமான கிணறுகளிலிருந்து இறைக்கப்படுகிறது. இங்கே ஜல வசதி அதிக மில்லாததால், நெல் விளைவு சொற்பம்.

இனி, நாம் மதுரைக்குத் திரும்பி வந்து, வடமேற்காய்ச் செல்லும் ரஸ்தாவில் செல்லுவோம். இப் பாதை, வைகை நதி யோரமாகவே செல்லுகிறது. வழியில் செழிப்பான வயல்களையும் ரஸ்தாவில் இரு புறங்களிலும் பசுமையான மரங்களையும், தென்னந் தோப்புக்களையும் பார். அப்படியே சென்றால் பேரணை வந்து சேருவோம். இங்கே பெரியாற்றிலிருந்து வரும் தண்



பேரணை

ணீரை அணையினால் தேக்கி, நிலக்கோட்டை, மதுரை, மேலூர் தாலூகாக்களிலுள்ள நிலங்களுக்குத் திருப்புகிறார்கள். இதனால் இந்தத் தாலூகாக்களில் நெல் விளைவு அதிகம் ஏற்பட்டிருக்கிறது.

இனி, வடக்காகச்சென்று, நிலக்கோட்டை சேர்வோம். நாயக்க அரசர்கள் காலத்தில் இதைச் சுற்றி ஒரு பெரிய மண் கோட்டைச் சுவர் இருந்ததாம். ஆதலால், இதற்கு நிலக்கோட்டை என்று பெயர் வந்ததாகச் சொல்லுகிறார்கள்.

இதற்கு மேற்கில் சுமார் 8 மைல் தூரத்திலுள்ள வத்தலக்குண்டு என்ற ஊருக்குப் போவோம். இங்குப் பாயும் மஞ்சள் ஆற்றில் வருஷம் முழுவதும் ஜலம் ஓடுகிறது. இது ஒரு செழிப்பான பிரதேசம். இங்கே ஒருவிதச் சம்பா நெல் ஏராளமாய் விளைகிறது.

இங்கிருந்து மேற்கே சென்று, வடக்கே திரும்பிக் கோடைக்கானல்



கொடைக்கானல்

மலையை அடைவோம். இவ்விடம் சதா காலமும் குளிர்ச்சியாகவே இருக்கும். இங்குத் தனவந்தர்கள் கோடைக் காலத்தில் சுகத்திற்காக வருகிறார்கள். இதன் மத்தியில் ஒருபெரிய ஏரி இருக்கிறது பார். இதைச் சுற்றிலுமுள்ள அழகிய ரஸ்தாக்களையும், பங்களாக்களையும் கவனி. மலைச் சரிவுகளிலுள்ள நீர் வீழ்ச்சிகளையும் பார். இது சுமார் 7500 அடி உயரம் உள்ளது. இம் மலைமேல் இருக்கும் நக்ஷத்திர ஆபீ

லைப் பார்ப்போம். இப்பிரதேசத்தில் பேரிக்காய், முட்டைக்கோஸ் என்னும் கீரை, ஐரோப்பியக் காய்கறிகள், காப்பி, தேயிலை, வாழை முதலியன அதிகமாய் விளைகின்றன. இம் மலையின் காட்சி பார்க்கத் தகுந்தது. மலையிலிருந்து இறங்கிச் செல்லுவோம்.

இங்கிருந்து மேற்கே சென்று, பெரிய குளம் போய்ச் சேருவோம். இது வராக நதிக்கரையின் மீது இருக்கிறது. பழனி மலைமேலுள்ள பேர்ச்சம் என்ற ஒரு பெரிய ஏரியிலிருந்து குடிக்கும் ஜலம் இந்த ஊருக்குக் குழாயின் மூலம் கொண்டுவரப் படுகிறது. இங்குச் சில சர்க்கார் கச்சேரிகளும், ஒரு ஹைஸ்கூலும் இருக்கின்றன. இங்கே செழித்து வளர்ந்துள்ள தென்னந்தோப்புக்களைப் பார். இவ்வூர் அருகில் சிதம்பரத் தீர்த்தம் என்ற ஒரு நீர்வீழ்ச்சி இருக்கிறது. பெரிய குளத்திலிருந்து தென்மேற்காகச் செல்லுவோமானால் தேனி, என்னும் ஊரை அடைவோம். இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்கே ஒரு பஞ்சு அரைக்கும் சாலையும், சத்திரமும் இருக்கின்றன. இங்கு வாரத்துக் கொரு முறை பெரிய சந்தை ஒன்று கூடுகிறது. இங்கிருந்து ரஸ்தா மூலம் தெற்கே செல்லுவோம். ரஸ்தாவின் இருபுறங்களிலும் செழிப்பான நெல் வயல்களைப் பார். கிழக்கிலும் மேற்கிலும் நிலம் படிப்படியாக உயர்ந்து பெரிய மலைகளாக முடிகின்றன. நீர் வளம் குறைவான மேட்டு நிலங்களில், எள்ளு, உளுந்து, துவரை, பாசிப்பயறு முதலியவைகளும், பருத்தியும் உண்டாகின்றன. மலை அடிவாரங்களில், தேயிலை, காப்பி, ஏலத் தோட்டங்கள் இருப்பதைக் கவனி. மிளகு, கிராம்பு முதலிய வாசனைத்திரவியங்களும் இங்குப் பயிராகின்றன.

சின்னமனூர் வழியாய் உத்தமபாளையம் சேர்வோம். இங்கு ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது.

இதைக் கடந்து கம்பம் என்னும் ஊரை அடைவோம். இப்பிரதேசம் ஒரு பள்ளத்தாக்கு. இது ஒரு குளிர்ந்த ஈரமான பிரதேசம். இது சுற்றிலும் விளையும் தானிய வகைகளுக்கு மத்திய ஸ்தலமாக இருக்கிறது. இதன் சீதோஷ்ணஸ்திதி, தொத்து வியாதிகளை உண்டாக்கத் தக்கது. இதன் அருகிலுள்ள காடுகளில் விலையுயர்ந்த மரங்கள் செழித்து வளர்கின்றன. இங்கே வசிக்கும் ஜனங்களில் பெரும்பாலோர் கன்னடம் பேசும் காபிலியர்கள்.



பெரியாற்றுத் தேக்கம் அணைக்கட்டு

இந்த ரஸ்தாவின் வழியாய்க் கூடலூர் செல்லுவோம். இது ஒரு யூனியன் பட்டணம்.

இங்கிருந்து சுமார் 10 மைல் தூரத்திலுள்ள பெரியாற்று ஏரிக்குப் போவோம். இங்குள்ள அணைக்கட்டைப் பார். இதில் தேக்கி யுள்ள தண்ணீரினால் இந்த ஜில்லாவில் சுமார் ஒன்றரை லட்சம் ஏக்கர் நிலம் சாகுபடி செய்யப்படுகிறது.

அங்கிருந்து திரும்பி மறுபடியும் தேனி வந்து சேர்வோம். தேனியிலிருந்து ஒரு ரஸ்தா மேற்காகப் போடி நாயக்கனூருக்குப் போகிறது. நாம்கிழக்காகத்திரும்பி, ஆண்டிபட்டி, உசிலம்பட்டி மார்க்கமாக மதுரைக்குப் போவோம். ரஸ்தாவின் இரு பக்கங்களிலும் பாறைகளிலிருந்து வெட்டி எடுத்த சல்லிக் கற்கள் குவியல் குவியலாகக் குவித்திருப்பதைப்பார். இது மேட்டுப் பாங்கான நிலம். இங்கே நீர் வசதி குறைவு. மழை பெய்தால் தான் வேளாண்மையுண்டு.

இப்பொழுது நாம் மதுரையிலிருந்து வடமேற்காகத் திண்டுக்கல்மார்க்கமாய்ப் பழனிக்குப் போகும் ரஸ்தாவில் பிரயாணம் செய்வோம். இரு பக்கங்களிலுமுள்ள சோலைகளையும் செழிப்பான நிலங்களையும் பார். அம்மைய நாயக்கனூர் வந்து சேர்ந்தோம். இது ஒரு ஜமீன் பட்டணம். இங்குள்ள ரயில்வே ஸ்டேஷனைக் கொடைக்கானல் ரோட் என்றுசொல்லுகிறார்கள். இங்கிருந்து கொடைக்கானல் மலை, மேற்கே 50மைல் தூரத்திலிருக்கிறது. இந்த ரஸ்தாவின் வடக்கே சென்றால், திண்டுக்கல் போய்ச் சேரலாம்.

ரஸ்தாவின் இரு புறங்களிலும் பழத் தோட்டங்களையும் காய் கறித் தோட்டங்களையும் பார்ப்போம். இப்பிரதேசத்தின் செம்மண் தரையில், நிலக்கடலையும், மலையடிவாரங்களில் வாசனைத் திரவியங்களும் பயிராகின்றன. பருத்தி பயிராகும் வயல்களையும், புகையிலைத் தோட்டங்களையும் ஏராளமாய்ப் பார்க்கிறோம்.

திண்டுக்கல் வந்து சேருவோம். இது ஒரு ரயில்வே ஜங்ஷன்.



திண்டுக்கல் குன்று.

இதை அடுத்துள்ள குன்றின் மேல் ஒரு கோட்டை இருக்கிறது. இங்கிருந்து புகையிலை, சுருட்டு, பீடி, இரும்புப் பெட்டி, பூட்டு, பதனிடும் தோல் முதலியன ஏற்று மதியாகின்றன. இங்கே இரண்டு ஹைஸ்கூல்களும், ஒரு டிரெயினிங் ஸ்கூலும், அநேக கச்சேரிகளும் இருக்கின்றன.

இங்கிருந்து ஒரு ரஸ்தா வடகிழக்காக அய்யலூர் மார்க்கமாய்த் திருச்சிக்குச் செல்லுகிறது.

திண்டுக்கல்லி லிருந்து மேற்கே 10-மைல்தூரத்திலுள்ள கன்னிவாடிக்குப் போவோம். இது ஒரு ஜமீன் பட்டணம். இங்கே வாழைப்பழ விளைவு அதிகம்.

மறுபடியும் திண்டுக்கல் வந்து மேற்காகப் பழனிமலைக்குச் செல்லு

வோம். இப் பிரதேசம் நீர்வள மற்றது; சொற்ப மழையை உடையது. இங்கு, உளுந்து, துவரை, பாசிப் பயறு விசேஷமாய்ப் பயிராகின்றன. பருத்தி விளையும் வயல்களையும், புகையிலைத் தோட்டங்களையும் இங்கு விசேஷமாய்க் காணலாம். இங்கே, நிலக்கடலை அதிகமாகப் பயிராகிறது. பழனி மலையின் உயரமான இடங்களில், செழித்த பள்ளத் தாக்குகளில், நெல், கோதுமை விளைவதைப் பார். மலைச் சரிவுகளில் ஏலம், வாழை, காப்பித் தோட்டங்களைக் கவனி.

பழனி மலையின் மீதுள்ள பழனி யாண்டவர் கோவில் தென்னிந்தியா



பழனிமலைக் கோவில்

வில் மிகவும் பிரசித்தி பெற்றது. இங்கு அநேக சத்திரங்களும், கச்சேரிகளும்,ஒரு ஹைஸ்கூலும் இருக்கின்றன.

இங்கிருந்து வட மேற்காக ஒரு ரஸ்தா உடுமலைப் பேட்டைக்கும், வடக்காக ஒரு ரஸ்தா தாராபுரத்துக்கும் செல்லுகின்றன. மறுபடியும் இங்கிருந்து மதுரைக்குப் போவோம்.

மதுரையின் வடக்கில் தல்லாகுளம் முன் பார்த்தோமல்லவா? அங்கிருந்து 4 ரஸ்தாக்கள் முறையே நத்தம், அழகர் கோவில், மேலூர், சிவகங்கைக்குச் செல்லுகின்றன. நாம் நத்தம் போகும் ரஸ்தாவில் மோட்டாரில் போவோம். ரஸ்தாவின் இரு புறங்களிலும் நெல்வயல்களையும், வடக்கே போகப் போக மேட்டு நிலங்களில் கடலை, துவரை முதலிய பயிர்களையும் காண்கிறோம்.

நத்தம் வந்து சேர்வோம். சிறுமலைக்கும் அழகர் மலைக்கும் மத்தியில் இருக்கும் கணவாயைப் பார்ப்போம். இங்குள்ள விறகு பல ஊர்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. பழைய கோட்டையையும் காண்போம். இப்பக்கங்களில் நிலக்கடலை, பருத்தி முதலியன விளைவு அதிகம். இங்கே கள்ளர்கள் அதிகம். இவர்கள் 1755-ம் வருஷத்தில் ஒரு ஆங்கிலேயச் சேனையை எதிர்த்துத் தோற்கடித்தார்கள் என அறிகிறோம். இது சரித்திர சம்பந்தமானது. எண்ணெய் வியாபாரம் இங்கே விசேஷம்.

அங்கிருந்து கிழக்காகக் கொட்டாம்பட்டிக்கு வந்து சேர்வோம். முற்காலத்தில் இது இராமேஸ்வரம் செல்லும் யாத்திரிகர்களுக்குத் தங்குமிடமாயிருந்தது. இதைச் சூழ்ந்துள்ள மலைகளில் இரும்பு மணல் அதிகமுண்டு. அங்கிருந்து ஒரு ரஸ்தா வடக்காகத் திருச்சிக்குப் போகிறது.

இங்கிருந்து மேலூருக்குப் போகும் ரஸ்தாவில் செல்லுவோம். வழியில் மலைகளையும் குன்றுகளையும் காண்போம். சாலைகளிலுள்ள மரங்களைப் பார். புளியமரம் அதிகம். செம்மண் கலந்த பூமியைக் காண்.

மேலூர் வந்து சேர்வோம். இங்குள்ள செம்மண் பொட்டல்களெல்லாம் நன்செய் வயல்களாக மாறி விட்டன. ஏன்? இத்தானுகா

வின் தென்பாகத்தில் பெரியாற்று ஜலம் பாய்கிறது. ஆகையால், இங்கே நெல் விளைவு மிகுதி. இங்கேயுள்ள கள்ளர்கள் உயர்ந்த நிலைக்கு வந்துள்ளார்கள். இங்கே முன்சீபு கோர்ட்டு, தாசில்தார், சப்மாஜிஸ்ட்ரேட்டுகச்சேரிகளிருக்கின்றன. இங்கு ஒரு ஹைஸ்கூலும் இருக்கிறது.

இங்கிருந்து கிழக்கே ஒரு ரஸ்தா திருப்பத்தூர் மார்க்கம் ராமநாதபுரம் ஜில்லாவுக்குப் போகிறது.

இங்கிருந்து தெற்கே 6 மைல் தூரத்திலுள்ள திருவாதவூருக்குச் செல்லுவோம். இங்குள்ள நன்செய் நிலங்கள் மிகச் செழிப்பானவை. இது பாண்டியனிடம் ஒரு காலம் மந்திரியா யிருந்த மாணிக்கவாசக சுவாமிகள் பிறந்த இடம். அவரால் திருவாசகம், திருக்கோவையார் என்ற சிறந்த தமிழ் நூல்கள் இயற்றப் பெற்றுள்ளன. இங்கிருந்து கிழக்கு முகமாய் ரஸ்தா சிவகங்கையை அடைகிறது.

மேற்கே திரும்பி மதுரைக்குவந்து



அழகர் கோவில்

சேர்வோம். அங்கிருந்து வடகிழக்கில் 12 மைல் தூரத்திலுள்ள அழகர் மலைக்குச் செல்லுவோம். இங்கே மலையடிவாரத்தில் கோவிலையும், திருமலை நாயக்கரால் கட்டப்பட்ட பழைய கட்டடங்களையும் காணலாம். மலையில் ஒரு சிற்றருவி விழுகிறது. அதில் ஜனங்கள் சென்று ஸ்நானம் செய்வார்கள். இவ்வாலயத்திலுள்ள அழகர் விக்கிரகம் மிக அழகுவாய்ந்தது. அழகர் கள்ளர்களின் குல தெய்வம். ஆடி மாதத்தில் விசேஷமான திருவிழா இங்கே நடைபெறுகிறது. இங்கே சாயச் சரக்குகள் விளைகின்றன. அழகர் மலையைச் சுற்றிப் பார்த்து மதுரைக்கு வந்து சேர்ந்தோம்.

பயிற்சி.

1. மதுரைத் தாலுகாவில் விவசாயப் பண்ணைகள் எங்கெங்கே உள்ளன?
2. அப்பண்ணையில் பயிராகும் பொருள்களையும், அவைகளுக்கு ஏற்பட்டிருக்கும் ஜல வசதியையும் சொல்லு.
3. திருமங்கலம் தாலுகாவில் பருத்தியும் பயறுவகைகளும் விசேஷமாய் உண்டாகக் காரணமென்ன?
4. வத்தலக் குண்டில் என்ன பயிராகிறது? ஏன்?
5. பெரிய குளத்தின் விளைபொருள்களென்ன?
6. கம்பம் பள்ளத்தாக்கு எங்கிருக்கிறது?
7. அது ஏன் முக்கியமானது?
8. மேலூர் ரஸ்தாவின் தென்பாகத்தில் நெல் விசேஷமாகப் பயிராகிறது. ஏன்?
9. திண்டுக் கல்லில் பயிராகும் பொருள்கள் எவை?
10. அழகர் கோவிலில் உள்ள விசேடங்களைச் சொல்லு.
11. மதுரையிலிருந்து பெரிய குளம் போகும் ரஸ்தாவில் இரண்டு செழிப்புள்ள ஊர்களைச் சொல்லு.
12. கொடைக்கானல் மலையில் என்னென்ன உற்பத்தியாகின்றன?

ஐந்தாம் பாடம்

ரயில் பிரயாணம்.

இது ஒரு முக்கியமான ரயில்வே ஜங்ஷன். இங்கிருந்து கிழக்கே சிலைமான் மார்க்கம் இராமநாதபுரத்துக்கும், தெற்கே சாத்தூர் மார்க்கம் தூத்துக்குடிக்கும், மேற்கே போடி நாயக்கனூருக்கும், வட மேற்கே பழனி மார்க்கம் கோயம்புத்தூருக்கும், வடக்கே அய்யலூர் மார்க்கம் திருச்சிக்கும் இருப்புப் பாதைகள் செல்லுகின்றன.

பிள்ளைகளே, எப்பொழுது நமது ஜில்லாவுக்கு ரயில் போடப்பட்டது, தெரியுமா? 1885-ம் வருஷம் மதுரைக்கு ரயில் போடப்பட்டது. இப்பொழுது மதுரை ஒரு பெரிய ஜங்ஷன்.



மதுரை ரயில்வே ஸ்டேஷன்

ரயில் மார்க்கமாக நமது ஜில்லா முழுவதையும் சுற்றிப் பிரயாணம் செய்வோம். கிழக்கே செல்லும் ரஸ்தாவில் சிலைமான் வரைக்கும் செல்லுவோம். இவ்வழி வைகையாற்று ஓரமாகவே செல்லுகிறது. இரு பக்கங்களிலும் நன்செய் நிலங்களும் தென்னந் தோப்புக்களும் செழிப்புற்றிருக்கின்றன. இங்கிருந்து இந்த ரயில் பாதை இராமேஸ்வரம் வரை செல்லுகிறது.

மதுரைக்கு வந்து, தெற்கே செல்லும் ரயிலில் உட்காருவோம். ரயில் புறப்பட்டுவிட்டது. இரு பக்கமும் சிறு சிறு குன்றுகளும் பஞ்சு ஆபீஸ்களும் காணப்படுகின்றன. பசுமலை, திருப்பரங்குன்றம் முதலிய ஊர்களின் வழியாக இருப்புப்பாதை செல்லுகிறது. இப்பாதையின் இரு பக்கங்களிலும் கரிசல் மண் பூமியே காணப்படுகின்றது. பருத்தி விசேஷம். ஆறுகள் ஒன்றையுங்காணோம். கப்பலூர், திருமங்கலம் தாண்டி, கள்ளிக்குடி வந்து சேர்வோம். இங்கிருந்து ரயில்பாதை, சாத்தூர் மார்க்கமாய்த் தூத்துக்குடிக்குச் செல்லுகிறது. இனித் திரும்பி வேறு மார்க்கம் செல்லுவோம்.

போடிநாய்க்கனூருக்குச் செல்லும் ரயிலில் உட்காருவோம். ரயில் புறப்பட்டு விட்டது. கொஞ்சதூரம் போன பின், மலைகளும் சிறு குன்றுகளும் பாறை நிலங்களும் காணப்படுகின்றன. நாகமலை, செக்கானூரணி, வாலாந்தூர்தாண்டி உசிலம்பட்டி ஸ்டேஷனுக்கு வருவோம். இது திருமங்கலம் தாலூகாவைச் சேர்ந்தது. இங்கேயுள்ள கள்ளர்களைச் சீர்ப்படுத்த ஒரு ஹைஸ்கூலுமிருக்கிறது. பிறகு தொட்டப்பநாய்க்கனூர் ஸ்டேஷனுக்கு வந்து சேர்வோம். இது ஆண்டிபட்டி மலைக்கு இடையிலுள்ள ஒரு கணவாயின்மேல் இருக்கும் கிராமம்.

இந்தக்கணவாயின் வழியாய் ரயில் போகிறது. பெரிய குளம் தாலூகாவிலுள்ள ஆண்டிபட்டி ஸ்டேஷனில் நின்றது. இதைச் சுற்றிப் புன்செய்க்காடுகள் பார்த்தோம். நன்செய்

காடுகளைக்காணோம். வள்ளல் நதி, தேனிபூதிப்புரம் முதலியஸ்டேஷன்களைக் கடந்தோம். போடிநாயக்கனூர் வந்தோம். மதுரையிலிருந்து வரும் தென்னிந்திய ரயில் பாதை இங்கே முடிகிறது. இது தேனி நதி பள்ளத்தாக்கில் இருக்கிறது. நதியின் ஓரங்களில் நெல் விளைவு மிகுதி. இங்கே கச்சேரிகளும் ஒரு ஹைஸ்கூலும் உண்டு. கண்ணன் தேவி மலையிலுள்ள தோட்டங்களுக்கும், தேயிலை, ஏலத் தோட்டங்களுக்கும் போகும் பாதையில் இருப்பதால் இந்த ஊர் வியாபார விருத்தியடைந்து வருகிறது. போடிநாயக்கனூரிலிருந்து மறுபடியும் மதுரைக்கு வருவோம்.

இப்பொழுது திண்டுக்கல்மார்க்கம் போகும் ரயிலில் உட்காருவோம். ரயில் புறப்பட்டு விட்டது; வைகையாற்றுப் பாலம் தாண்டி விட்டது. முக்கியமான ஸ்டேஷன்களையும், நிலங்களையும் கவனிப்போம். சமையநல்லூர் வந்தோம். இங்கு ஒரு பிரசித்தி பெற்ற மாரியம்மன் கோவில் இருக்கிறது. ரயில் போகும் மார்க்கங்களின் இரு பக்கங்களிலும் செழிப்பான வயல்கள் காணப்படுகின்றன. ஆங்காங்குத் தென்னந்தோப்புகளும் காணப்படுகின்றன. சோழவந்தானுக்கு வந்தோம். இது நிலக்கோட்டைத் தாலூக்காவைச் சேர்ந்தது; வைகை நதியின் வடகரையில் இருக்கும் ஒரு யூனியன் டவுன். இதில் பெருமாள் கோவில், மங்கம்மாள் சத்திரம், ஹைஸ்கூல் இருக்கின்றன. ரயில் புறப்பட்டுவிட்டது. இருபக்கமும் செழிப்பான வயல்களும், தென்னந்தோப்புகளும் காணப்படுகின்றன. பிறகு கொஞ்சம் கொஞ்சமாகப் பூமி மேடாகத் தோன்றுகிறது. செழிப்பான வயல்களைக் காணோம். பாறை நிலங்கள் காணப்படுகின்றன. அநேக ஸ்டேஷன்கள் தாண்டி அம்மைய நாயக்கனூர் (கொடைக்கானல் ரோடு) வந்தோம். இரு பக்கங்களிலும் மலைகள் காணப்படுகின்றன. பிறகு, மேடான பிரதேசத்தில் உள்ள அம்பாத்துரை ஸ்டேஷனைத் தாண்டித் திண்டுக்கல் வந்தோம். இது ஒரு ஜங்ஷன்.

திருச்சிபோகும் ரயிலில் உட்கார்ந்தோம். வடமதுரை தாண்டினோம். ரயிலின் இரு பக்கங்களிலும் குவித்துள்ள விறகுகள் ஏற்றுமதியாகின்றன. எதிரில்மலைகளும் குன்றுகளும் காணப்படுகின்றன. அய்யலூர் வந்துசேர்ந்தோம். இனித்திரும்பித் திண்டுக்கல்லுக்குச் செல்லுவோம்.

திண்டுக்கல்லில் இருந்து பழனிக்குப் போகும் ரயிலில் உட்காருவோம். செவ்வல் நிலங்களும், கரிசல் நிலங்களும் காணப்படுகின்றன. ரயில் பலக்கனூத்து, ஒட்டன் சத்திரம், சத்திரப்பட்டி முதலிய ஸ்டேஷன்களைத்தாண்டிற்று. பழனி வந்து சேர்ந்தோம். இங்கிருந்து இந்த ரயில் பாதை உடுமலைப் பேட்டை மார்க்கமாய்க் கோயம்புத்தூருக்குப் போகிறது.

பயிற்சி

1. மதுரையிலிருந்து கள்ளிக்குடிக்குரயில் மார்க்கம் போனால், நீ கடக்க வேண்டிய இரண்டு முக்கிய ஸ்டேஷன்களைச் சொல்லு.
2. மதுரையிலிருந்து அம்மையநாயக்கனூருக்குப் போகும்மார்க்கத்தில் நீர் வளம் பொருந்திய ஸ்டேஷன் எது ?
3. அம்பாத்துரையில் ரயில்களோ வண்டிகளோ மெதுவாகஏன் செல்லுகின்றன?
4. திண்டுக்கல் ஒரு ஜங்ஷன், ஏன் ?
5. அய்யலூர் ஸ்டேஷனில் என்ன ஏற்றுமதி நடக்கிறது ?
6. பழனிக்குப் பிரயாணிகள் ஏன் அதிகமாய் வருகிறார்கள் ? [எப்படி ?
7. பழனித் தாலூகாவில் நில அமைப்பு

ஆறாம் பாடம்

மழையும் சீதோஷ்ணமும்

மழை:—மேகங்களினால் மழை ஏற்படுகிறது. மேகங்களைக்கொண்டு வருவது காற்று. இப்பொழுது நமது ஜில்லாவில் அடிக்கும் காற்றைப் பற்றிக் கவனிப்போம்.

சித்திரை, வைகாசி மாதங்களில் தெற்கேயிருந்து காற்று வீசுகிறது.



தென் மேற்குக் காற்று

இதைத் தென்றல் என்று சொல்லுகிறோம். இது நமக்கு மழையைக் கொடுக்காவிட்டாலும், அந்த மாதங்களில் நமக்கு ஏற்படும் உஷ்ணத்தைச் சற்றுத் தணிக்கிறது.

ஆனி, ஆடி மாதங்களில் மேல் காற்று அராபிக்கடலிலிருந்து வீசுகிறது. மேல் காற்று வீசுவதால், ஏராளமான நீராவி மேகங்களைத் தள்ளிக்கொண்டு வருகிறது. ஆனால், இம் மேகங்கள் நமது ஜில்லாவின் மேற்கிலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகளால் தடுக்கப் படுகின்றன. ஆகையால் நம்முடைய ஜில்லாவில் வீசும் காற்று வறண்ட காற்றாகவே இருக்கிறது. சிற்சில சமயங்களில் அம்மேகங்களில் சில மலைகளைத் தாண்டி நமக்கு மழையைத் தருகின்றன. இதைத்தான் கோடைமழை என்கின்றோம்.

ஆவணிமாதக் கடைசியில் வடகிழக்கிலிருந்து காற்று வீசுகிறது.



வட கிழக்குக் காற்று

இக்காற்றுக் கொண்டுவரும் மேகங்களால் நாம் மழையைப் பெறுகிறோம். இக்காற்று அநேகமாய் கார்த்திகை மாத முடிய வீசுகிறது. இதுவே நமக்கு மழைக்காலம்.

சீதோஷ்ண நிலைமை.

மார்கழி, தை, மாசி மாதங்களில் வடக்கிலிருந்து குளிர்காற்று வீசுகிறது. அதே காலத்தில் பனியும் பெய்கிறது. இப்பொழுது குளிர் அதிகம்.

உஷ்ணம் :— நம் ஜில்லா அதிக உஷ்ணமான தென்றே சொல்ல வேண்டும். பங்குனி பதினைந்துக்கு மேல், ஆனி பதினைந்து வரை, நாம் தாங்கமுடியாதகடுமையான உஷ்ணம் இருக்கும். நமக்குக் கடற்கரை இல்லாததாலும், வருஷத்தில் இரண்டொரு மாதங்களே மழை பெய்வதாலும் உஷ்ணம் பெரும்பாலும் அதிகமாகவே இருக்கிறது.

பயிற்சி

1. நமது ஜில்லாவில் எந்த மாதங்களில் மழை பெய்கிறது ?
2. மேற்காற்றினால் நமக்கு ஏன் மழை பெய்கிறதில்லை ?

3. கோடைமழை என்றால் என்ன? அது எந்த மாதங்களில் பெய்கிறது?
4. நமது ஜில்லாவில் பொதுவாக உஷ்ணம் அதிகம். ஏன்?
5. எந்த மாதங்களில் நமக்குக் குளிர் அதிகம்?

பூமியின் தன்மை

நமது ஜில்லா ஒரு வறண்ட பிரதேசமென்றே சொல்லலாம். இதில் மிகவும் வறண்டபாகம் பழனித்தாலூகாவே யாகும். அதிக மழையை யுடையது மேலூர் எனச்சொல்லலாம். இந்த ஜில்லாவில் வைகை ஆறும் அதன் உபநதிகளும் பாயுமிடங்கள் வண்டல் படிந்திருப்பதால் அதிகச் செழுமை பொருந்தியுள்ளது.

இதன் மேற்கிலும் வடக்கிலும் மலைப்பாங்கான பிரதேசம். கிழக்கிலும் தெற்கு வடக்காய் ஒரு மலைத்தொடர் செல்லுகிறது.

இந்த ஜில்லாவில் காணப்படும் மண்வகைகளை (1) வண்டல், (2) கறுப்புக் களி, (3) செம்மண் என மூவகையாகப் பிரிக்கலாம். பெரியகுளம், நிலக்கோட்டை, மதுரை, மேலூர் ஆகிய இத் தாலூகாக்களில் ஆறுகளையடுத்த பிரதேசங்கள், வண்டல்மண் படியப்பெற்றவை. இங்கு நெல் விளைவு அதிகம்.

திண்டுக்கல், பழனி, பெரியகுளம் முதலானவைகளிலும் கறுப்புக் களிமண் அநேக இடங்களில் காணப்படுகின்றது. இங்குப் பருத்தி விசேடமாய்ப் பயிராகிறது. இத்தாலூகாக்களில் அநேக இடங்கள் செம்மண் நிலமாகவும் உள்ளன. அவ்விடங்களில் துவரை, உளுந்து, பாசிப்பயறு, வேர்க்கடலை ஆகிய இவைகள் விசேஷமாய்ப் பயிராகின்றன.

பயிற்சி

1. நமது ஜில்லாவில் அதிக மழை உள்ள தாலூகாவையும் மிகக் குறைந்த மழையுள்ள தாலூகாவையும் சொல்லு.
2. மலைகள் நமது ஜில்லாவில் எப்பாகங்களில் காணப்படுகின்றன?
3. நமது ஜில்லாவிலுள்ள மண்வகைகளைச் சொல்லு.
4. வண்டல் மண் நமது ஜில்லாவில் எந்தத் தாலூகாக்களில் ஏற்பட்டிருக்கிறது?
5. திருமங்கலத்தில்பருத்தியும், பழனியில் உளுந்து, துவரை முதலியனவும் ஏன் அதிகமாய்க் காணப்படுகின்றன?

நீர்ப்பாசானமும் விளைபொருள்களும்.—பயிர்கள் நன்றாய் வளர்வதற்குப் பூமியின் செழுமையும் தண்ணீர் வசதியும், உஷ்ணமும் வேண்டும்.

நம் ஜில்லாவில் வைகை நதியும் அதன் உப நதிகளும் பாயப்பெற்றனவாகிய பெரியகுளம், நிலக்கோட்டை, மதுரை மேலூர் தாலூகாக்களில் நெல் ஏராளமாய்ச் சாகுபடி செய்யப்படுகிறது.

திண்டுக்கல், பழனித்தாலூகாக்கள் வறண்ட பிரதேசங்கள்; ஜல வசதியில்லை. ஆகையால், இங்குக் கம்பு, சோளம், வரகு, துவரை, வேர்க்கடலை முதலிய புன்செய்ப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

திருமங்கலம் தாலூகாவில் பெரும்பாகம் கரிசல்மண் நிறைந்துள்ளது; மழையும் சொற்பம். இங்குப் பருத்தியும், உளுந்து, துவரை முதலிய தானியங்களும் பயிர் செய்யப்படுகின்றன.

இன்னும் பழனி, பெரியகுளம், திண்டுக்கல், கொடைக்கானல், ஆகிய இத் தாலூகாக்களின் மலைச்சாரல்களில் காப்பி, தேயிலை, ஏலம், வாழை

முதலிய தோட்டங்களும், மலையை அடுத்த காடுகளில், குங்கிலியம், சிங்கோனு, கற்பூரம்முதலானமரங்களும் இன்னும் விலைமதிப்புள்ள பலவகையான மரங்களும் உண்டாகின்றன.

மேலும், பழனி, திண்டுக்கல், பெரியகுளம் ஆகிய தாலூகாக்களில் புகையிலை விசேஷமாய்ப்பயிராகிறது. பெரியகுளத்தில் எள்ளும் மேலூரில் கொட்டை முத்தும் விசேஷம்.

நமது ஜில்லாவில் 100க்கு 80 பேர் விவசாயம் செய்து பிழைப்பவர்கள். நமதுஜில்லா வாசிகளுக்குப் பயிரிடுதலில் ஊக்கமில்லை. நமது நாட்டில் ஒரு ஏக்கரில் விளைவதைப் போல் மூன்று நான்கு பாகம் ஐரோப்பாவில் விளைகிறது. அதற்குக் காரணம் அவர்கள் உழைப்பே யாகும்.

திருமங்கலம்தாலூகாவில், உசிலம் பட்டியில், அரசாங்கத்தார் விவசாயப் பண்ணை ஒன்று ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதில் நல்ல பலன் கிடைக்கும்படியாகப் பயிர்ச் சாகுபடி செய்யும் விதங்களை ஜனங்களுக்குக் கற்பிப்பதுடன், நல்ல வித்துக்களையும் உழுவதற்கான கருவிகளையும் தயார்செய்து கொடுக்கிறார்கள்.

பயிற்சி

1. நெல் நமது ஜில்லாவில் எங்குப் பயிராகிறது? ஏன்?
2. எள்ளு, வேர்க்கடலை,கொட்டைமுத்து, பருத்தி, துவரை, புகையிலை ஆகிய இவை விசேஷமாய்ப் பயிராகும் தாலூகாக்களைச் சொல்லு.
3. கொடைக்கானல் மலையில் காணப்படும் இலைகளில் இரண்டு வகைகளையும்,மலைச் சரிவுகளில் பயிராகும் பொருள்களையும் சொல்லு.
4. வாழைப்பழம் நமது ஜில்லாவில் எங்கு விசேஷம் ?
5. உசிலம்பட்டியில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் விவசாயப் பண்ணையினால் ஜனங்களுக்கு உபயோகமென்ன ?

ஏழாம் பாடம்

கைத்தொழில் வியாபாரம்

நமது ஜில்லாவில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு அநேகசெய்பொருள்கள் தயாராகின்றன. இவ்விதம் நடக்கும் தொழில்களில் முக்கியமானவை நூல்நூற்றல் நெசவு, மரச்சாமான் செய்தல், பாத்திரவேலை, தோல் பதனிடுதல், கோரப்பாய் பின்னுதல், சுருட்டு, இரும்புப்பெட்டி, பூட்டு செய்தல் முதலியன.

நெசவு:—இத் தொழிலைப் பட்டு நெசவு, பருத்தி நெசவு, கம்பளி நெசவு என மூவகையாகப் பிரிக்கலாம். பட்டு நெசவும், பருத்தி நெசவும் விசேஷமாய் சௌராஷ்டிர ஜாதியாரால் செய்யப்பட்டு வருகின்றன. இவர்கள் மதுரை, திண்டுக்கல் ஆகிய இடங்களில் அதிகமாயிருக்கிறார்கள். இவர்கள் செய்யும் சரிகை வேஷ்டிகளும், சாய வேஷ்டிகளும் சுன்னடிப் புடவைகளும் மிகவும் அழகானவை.

இன்னும் சேடரும், கைக்கோளரும், தேவாங்கரும், மகமதியரும், கிறிஸ்தவரும், ஆதித்திராவிடர்களும் நெசவுத்தொழில் செய்கிறார்கள்.

திருமங்கலம் தாலூகாவில் அநேக இடங்களில் துவாலைத் துண்டுகளும், மெத்தை விரிப்புகளும், கதர்த்துணிகளும் தயாராகின்றன.

நிலக்கோட்டை, பெரிய குளம், பழனி முதலிய இடங்களில் மலிவான கலர்ப் புடவைகள் நெய்யப்படுகின்றன.

கம்பளி நெசவு:— இது பழனி, பெரிய குளம், நிலக்கோட்டைத் தாலூகாக்களில் உள்ள குறும்பர்

மதுரை ஜில்லா
கோயம்புத்தூர் ஜில்லா
திருச்சிராப்பள்ளி ஜில்லா
புதுக்கோட்டை சமஸ்தானம்
திருவாங்கூர் சமஸ்தானம்
இராமநாதபுரம் ஜில்லா
நெல், புகையிலை
நவதானியங்கள் பருத்தி
பழனி தாலுகா
பழங்கள்
துணி, கம்பளி நெய்தல்
புகையிலை
பூட்டுகள், சுருட்டு செய்தல்
நெசவுத்தொழில்
திண்டுக்கல் தாலுகா
தோல் பதனிடுதல்
வாழை
காப்பி
காபி
வெள்ளைப்பூண்டு, பழங்கள்
கொடைக்கானல் தாலுகா
காய்கறி, கீரை
புன்செய் பயிர்கள்
மேலூர் தாலுகா
விறகுவெட்டுதல்
எண்ணெய் எடுத்தல்
நெல்
நெல், வாழை
நிலக்கோட்டை தாலுகா
புன்செய்தானியங்கள்
நிலக்கடலை
ஏலம், காபி, தேயிலை
பஞ்சு அறைத்தல்
நெசவுத்தொழில்
துணி, கம்பளி நெய்தல்
பெரியகுளம் தாலுகா
நெல்
நவதானியம்
நிலக்கடலை
பருத்தி
திருமங்கலம் தாலுகா
நெசவுத்தொழில்
பஞ்சு அறைத்தல்
நெல்
மதுரை தாலுகா
நூல் நூற்றல்
நெசவுத் தொழில்
சாயத் தொழில்
வ
மே
கி
தெ
விளைப்பொருள்களும்
கைத்தொழில்களும்

என்ற ஜாதியாரால் சில கிராமங்களில் நடைபெறுகின்றது.

கோரப்பாய் பின்னுதல்:— நமது ஜில்லாவில் சிற்சில இடங்களில் மகமதியர்களில் ஒரு பிரிவினரால் இத்தொழில் செய்யப்படுகிறது.

பாத்திரம் செய்தல்:—மதுரை, திருமங்கலம், நிலக்கோட்டை, பெரியகுளம் முதலான இடங்களில் பாத்திரங்கள் செய்யப்படுகின்றன.

திண்டுக்கல்லில் தோல் பதனிடுதல், இரும்புப் பெட்டி, பூட்டுகள் செய்தல், சுருட்டு செய்தல் முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன.

கொஞ்ச காலத்துக்கு முன் கைத்தொழில்கள் எல்லாம் கையாலேயே செய்யப்பட்டு வந்தன; இப்பொழுதோ இயந்திரங்களினால் செய்யப்படுகின்றன. உதாரணமாக, நெல் அரைப்பதற்கும், மாவு திரிப்பதற்கும், நூல் நூற்பதற்கும் இயந்திரங்கள் ஊர்களிலிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்

நூல் நூற்றல்:— முன்னுளில், கைராட்டினத்தினுலேயே நூற்ருர்கள்.



கை ராட்டினம்.

இது வேலையில்லாதவர்களுக்கும் கடின வேலை செய்ய முடியாதவர்களுக்கும்,ஜீவனம்செய்வதற்குச் சுலபமான வழி. தற்காலத்தில்வேலை இல்லாமல் திண்டாடுகிறவர்களின் கஷ்டத்தைப் போக்குவதற்காக, மகாத்மா காந்தியவர்கள் செய்த போதனையினுல், மக்கள், கைராட்டினங்களினுல் நூல் நூற்கிருர்கள்.

ஜனங்கள், அந் நூல்களைக்கொண்டு கைத்தறிகளில் உடைகளாக நெய்கிருர்கள். அவ்வாறு கையினுலே நூல் நூற்று நெய்த ஆடைகளுக்குக் கதர் என்று பெயர்.

இப்பொழுது கதர், மதுரை, திண்டுக்கல்லுக் கடுத்த காசிபாளையம், திருமங்கலம் தாலூகாவிலுள்ள குண்டடத்தூர், சாத்தங்குடி ஆகிய இவ்விடங்களில் துணி ஏராளமாக நெய்யப்படுகிறது. மற்ற தாலூகாக்களில் இத்தொழில் சுமாராக நடைபெற்று வருகின்றது.

பயிற்சி.

1. நமது ஜில்லாவில் என்ன தொழில்கள் செய்யப்படுகின்றன ?
2. நெசவுத் தொழிலுக்குப் பெயர்போன இரண்டு தாலூகாக்கள் சொல்லு.
3. திருமங்கலத்தில் ஜனங்கள் என்ன தொழில் செய்கின்றனர் ?
4. திண்டுக்கல்லில் நடைபெறும் தொழில்களைச் சொல்லு ?

ஏற்றுமதி, இறக்குமதி.

அயல் நாடுகளுக்கு நமது சரக்குகளை வியாபாரத்திற்கு அனுப்புதலை ஏற்றுமதி என்கிரேம். சாமான்களை அயல் நாடுகளிலிருந்து நாம் பெறுதலை இறக்குமதி என்கிரேம். நம் ஜில்லாவின் முக்கியமான ஏற்றுமதி இறக்குமதிகளையும் கவனிப்போம்.

நெ.	தாலுகா	ஏற்றுமதிச் சாமான்கள்
1	மதுரை	நெல், பருத்தி, சுன்னடிப்புடவைகள், சரிகை வேஷ்டிகள், பட்டு நூல் வஸ்திரங்கள், வெண்கலப் பாத்திரம்.
2	திண்டுக்கல்	சுருட்டு, தோல், பூட்டு, வெண்கலப் பாத்திரங்கள், இரும்புப் பெட்டிகள், மலை விளைவான காப்பிக்கொட்டை, மலை வாழைப் பழம், மலைப்பூடு.
3	பழனி	மலை விளைவுகளான காப்பிக்கொட்டை, தேயிலை, மலை வாழைப் பழம், மலைப்பூடு.
4	பெரியகுளம்	உளுந்து, துவரை, பாசிப்பயறு, எள்ளு, நெல், கொட்டை முத்து.
5	மேலூர்	நெல், கொட்டைமுத்து.
6	திருமங்கலம்	பருத்தி.
7	நிலக்கோட்டை	பித்தளை, செம்புப் பாத்திரங்கள்.
8	கொடைக்கானல்	மலைச்சாமான்கள், காப்பி, மலைப்பழம், ஆரஞ்சு, ஏலம்.

ஆகவே நமது ஜில்லாவிலிருந்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் சாமான்கள், பருத்தி, காப்பிக்கொட்டை, தேயிலை, சுருட்டு, வாழைப் பழம், தோல்.

இதர தேசங்களி லிருந்து மண்ணெண்ணெய், மோட்டார் வண்டிகள், இரும்பு, கண்ணாடிச் சாமான்கள், தீப்பெட்டிகள், காகிதங்கள், சீமைத் துணிகள் இறக்குமதியாகின்றன. நமது நாட்டில் கைத்தொழில் குறைவா யிருப்பதால், அநேக சாமான்களை அயல் நாடுகளி லிருந்து வாங்கவேண்டி இருக்கிறது.

பயிற்சி

1. காப்பிக்கொட்டை எங்கிருந்து ஏற்றுமதியாகிறது?
2. மதுரையி லிருந்து ஏற்றுமதியாகும் பொருள்கள் யாவை?
3. மலை வாழைப்பழம் எவ்விடங்களிலிருந்து ஏற்றுமதியாகிறது?
4. நாம் அநேக சாமான்களை அயல் நாடுகளிலிருந்து வாங்கவேண்டியிருக்கிறது. ஏன்?

எட்டாம் பாடம்

ஜனங்கள், மதம், பாஷை, கல்வி.

நமது ஜில்லாவில் ஜனத்தொகை அதிகமில்லை. ஏன்? இந்த ஜில்லாவில் மலைகள் அதிகம். குன்றுகளும் ஏராளமாம். 1931-ம் வருஷ சென்ஸஸ்படி ஜனத்தொகை 2195747. இதில் 100-க்கு 92 பேர் இந்துக்களாகவும், 4 பேர் மகமதியர்களாகவும், 4 பேர் கிறிஸ்தவர்களாகவும் இருக்கிறார்கள்.

இந்த ஜில்லாவில், மதுரைத் தாலுகாவில் ஜனநெருக்கம் அதிகம். பழனி, மேலூர், பெரியகுளம் தாலுகாக்களில் ஜன நெருக்கம் குறைவு. மற்ற தாலுகாக்களில் ஜனத்தொகை சுமாராக இருக்கிறது.

பாஷை:—இந்த ஜில்லாவில் வசிக்கும் ஜனங்களில் பெரும்பான்மையோரின் தாய்ப்பாஷை தமிழ். அதாவது, 100க்கு 72 பேர்கள் தமிழ்பேசுகிறவர்கள். 17 பேர்கள் தெலுங்கு பேசுகிறவர்கள். 6 பேர்கள் கன்னடம் பேசுகிறவர்கள். 2 பேர் செளராஷ்டிர பாஷை பேசுகிறவர்கள். மற்றவர்கள் ஆங்கிலமும் மலையாளமும் பேசுகிறார்கள்.

கல்வி.—இந்த ஜில்லாவில், ஆண்களில் 100க்கு 21 பேர்களும், பெண்களில் 100க்கு 2 பேர்களும் படித்தவர்கள்.

இந்த ஜில்லாவில் ஆரம்பக் கல்வி கற்பிக்கும் பள்ளிக்கூடங்கள் 1584-ம் உயர்தரக் கலாசாலைகள் 18ம், கல்லூரிகளில் 2-ம் இருக்கின்றன.

தொழிற்கல்வி, மதுரையிலுள்ள அரசாங்கத்தாருடைய தொழிற் கல்விச்சாலையிலும், பசுமலையில் அமெரிக்கன் பாதிரியார்களால் நடத்திவரும் பள்ளிக்கூடங்களிலும், திண்டுக்கல்லில் ஸ்வீடிஷ் பாதிரியார்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடத்திலும் கற்பிக்கப்படுகின்றன.

இப்பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் உலோக சம்பந்தமான வேலைப்பாடுகள், மரவேலைகள், பாய் பின்னுதல், விவசாயம், துணி நெய்தல் முதலியவைகளைக் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

பயிற்சி

1. மதுரை ஜில்லாவின் ஜனத்தொகை யென்ன?
2. இந்த ஜில்லாவில் என்ன பாஷைகள் பேசப்படுகின்றன?
3. இந்த ஜில்லாவில் தொழிற்சாலைப் பள்ளிக்கூடங்கள் எங்கு இருக்கின்றன?
4. அவ்விடங்களில் கற்றுக் கொடுப்பவை யாவை?

ஒன்பதாம் பாடம்

அரசாங்க முறை

நம் தேசம் ஆங்கிலேயர் அரசாட்சிக்கு உட்பட்டது என்று உங்களுக்குத்தெரியுமல்லவா? இங்கிலாந்தின் அரசர் ஐந்தாம் ஜார்ஜ் இப்பொழுது நமக்குச் சக்கரவர்த்தி. அவர்தமக்குப் பிரதிநிதியாக இந்தியாவை ஆள ஒரு வைசிராயை நியமித்திருக்கிறார். அவர் டில்லியில் இருக்கிறார். அவருக்குக் கீழ் ஒவ்வொரு மாகாணத்தையும் ஆளும் அதிகாரி கவர்னர் எனப்படுவர். அவருக்கு உதவி புரிய இரண்டு சட்ட சபைகளும் ஒரு நிர்வாக மந்திரி சபையும் இருக்கின்றன. நிர்வாக சபையிலிருக்கும் மந்திரிகள் சட்டசபை அங்கத்தினர்களி லிருந்தே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு மாகாணமும் அநேக, ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது ஜில்லாவின் அதிகாரிக்குக் கலெக்டர் என்பதுபெயர். வரிவசூல்இலாகாவுக்குத் தலைவர் ஜில்லாக் கலெக்டர்தான். அவருக்குக்கீழே டெபுடி கலெக்டரும், தாசில்தாரும்,ரெவினியூ இன்ஸ்பெக்டரும், கிராம முனிசீபும், கர்ணமும் உளர். இவர்கள் இராஜாங்கத்தாருக்குச் சேரவேண்டிய நிலவரி, மற்ற வரிகளை வசூல் செய்து செலுத்துவார்கள். அதன் கணக்குகளைச் சரிவர வைத்துக்கொள்வார்கள்.

நியாய விசாரணை இலாகா:— இதற்குத் தலைவர் ஜில்லா ஜட்ஜ். மதுரையில் இராமநாதபுரம் ஜில்லா ஜட்ஜும், மதுரை ஜில்லா ஜட்ஜும் இருக்கிறார்கள். இவர்களுக்குக் கீழ் சிவில் வழக்குகளை விசாரிக்க ஸப் ஜட்ஜும், முனிசிப், கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளும், கிரிமினல் வழக்குகளை விசாரிக்கப் பல மாஜிஸ்டி

ரேட்டுகளும் இருக்கிறார்கள். பொதுவாக ஜனங்களின் விவகாரங்களைத் தீர்த்து வைப்பதுதான் இவர்கள் வேலை.

போலீஸ் இலாகா:—ஜில்லா போலீஸ் சூபரிண்டெண்ட் இதற்குத் தலைவர். டெபுடி சூபரிண்டெண்டெண்ட், சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர், கான்ஸ்டேபிள்கள் நாட்டில் திருட்டு,சச்சரவு, கலகம் இல்லாமல் சமாதானமும் அமைதியும் இருக்கும்படி பார்த்துக்கொள்வது இவர்கள் வேலை.

கல்வி இலாகா:— ஜில்லாக் கல்வி அதிகாரி இதன் தலைவர். உதவிக் கல்வி அதிகாரிகள் இவருக்குக் கீழ் உண்டு. பள்ளிக்கூடங்கள் நன்றாய் நடைபெற்று வருகின்றனவா என்பதைப் பார்ப்பது இவர்கள் வேலை.

தபால், தந்தி இலாகா, காட்டு இலாகா, உப்புகள், சாராய இலாகா, சுகாதார இலாகா, வைத்திய இலாகா, பத்திரப் பதிவு இலாகா, மராமத்து இலாகா, இன்னும் அநேக இலாகாக்கள் உள்ளன.

ஜில்லா போர்டு:— இந்த ஜில்லாவில்,ரோடுவசதி, சுகாதாரம் முதலிய பொதுஜன காரியங்களைப்பரிபாலிக்க மதுரை ஜில்லா போர்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

முனிசிபாலிட்டி:—பெரிய நகரங்களில் நகர பரிபாலன சபைகள் அமைக்கப் பட்டுள்ளன. ஜன நன்மைக் குரிய சுகாதாரம், தண்ணீர், ரோடு, விளக்குப் போடுதல் முதலிய காரியங்களைச் செய்வது இச்சபையின் வேலை. நமது ஜில்லாவில் பெரிய நகரங்களாகிய மதுரை, பெரிய குளம், போடி நாயக்கனூர், கொடைக்கானல், பழனி, திண்டுக்கல் இவ்விடங்களில் முனிசிபாலிட்டிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பயிற்சி

1. நமது சக்கரவர்த்தியின் பெயர் என்ன?
2. ஜில்லாக் கலெக்டரின் வேலை ?
3. கல்வி இலாகாத் தலைவரின் வேலை என்ன ?
4. போலீஸ் இலாகாவின் தலைவர் யார் ?
5. நியாய விசாரணை இலாகாவின் வேலை என்ன ?

அரசாங்கப் பிரிவு

ஒரு ஜில்லாவின் அதிகாரிக்குக் கலெக்டர் என்பது பெயர். கலெக்டர் மட்டும் நேராக ஜில்லாப் பூராவும் கவனிப்பது கஷ்டமல்லவா? ஆகவே, நமது ஜில்லா, பல பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது. ஒவ்வொரு பிரிவுக்கும் தாலூகா என்பது பெயர். நமது ஜில்லாவில் 8 தாலூகாக்களிருக்கின்றன.

ஒவ்வொரு தாலூகாவின் அதிகாரிக்கும் தாசில்தார் என்பது பெயர். இவர்களின் வேலையை மேல் பார்வையிடச் சில தாலூகாக்களைச் சேர்த்து, ஒரு ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் அல்லது சப்கலெக்டர் இருக்கிறார்.

மதுரை ஜில்லா
கோயம்புத்தூர் ஜில்லா
திருச்சிராப்பள்ளி ஜில்லா
புதுக்கோட்டை சமஸ்தானம்
திருவாங்கூர் சமஸ்தானம்
இராமநாதபுரம் ஜில்லா
பழனித்தாலூகா
திண்டுக்கல் தாலூகா
கொடைக்கானல் தாலூகா
நிலக்கோட்டை தாலூகா
மேலூர் தாலூகா
பெரியகுளம் தாலூகா
மதுரை தாலூகா
திருமங்கலம் தாலூகா
பழனி
திண்டுக்கல்
மேலூர்
மதுரை
தேனி
தேவாரம்
கம்பம்
கூடலூர்
உசிலம்பட்டி
திருமங்கலம்
பேரையூர்
சாப்டூர்
கல்லுப்பட்டி
அவனியாபுரம்
பசுமலை
தாலூகா எல்லைகள்
முக்கிய ஊர்கள்

மதுரை, மேலூர் ஆகிய இவை சேர்ந்தது மேலூர் ரெவினியூ (டிப்டி கலெக்டர்) டிவிஷன். திருமங்கலம், பெரிய குளம் ஆகிய இவைகள் சேர்ந்தது உசிலம் பட்டி (டிப்டி கலெக்டர்) ரெவினியூ டிவிஷன்.

கொடைக்கானல், பழனி, நிலக் கோட்டை, திண்டுக்கல் ஆகிய இவைகள் சேர்ந்தது சப்கலெக்டர் டிவிஷன்.

நமது ஜில்லாவிலுள்ள தாலுகாக் கள்:—

(1) மதுரை, (2) திருமங்கலம், (3) பெரியகுளம், (4) கொடைக் கானல், (5) திண்டுக்கல், (6) பழனி, (7) நிலக் கோட்டை, (8) மேலூர் என்பன.

இனி ஒவ்வொரு தாலுகாக்களைப் பற்றியும் விபரமாகப் படிப்போம்.

பத்தாம் பாடம்

தாலுகாக்களும் முக்கிய ஊர்களும்

1. மதுரைத் தாலுகா

இது ஜில்லாவின் தென்கிழக்குப் பாகத்திலிருக்கிறது. இதன் எல்லை களைப் படத்தில்பார். இதுநமது ஜில் லாவிலுள்ள மற்ற தாலுகாக்களைப் பார்க்கிலும் சிறியது. இதில் வைகை நதி செல்லும் திசையைப்பார். இது மேற்கிலிருந்து கிழக்கு முகமாய்ச் செல்லுகிறது. அதனால் இந்தத் தாலுகா மேற்கில் மேடாகவும், கிழக் கே போகப்போகத் தாழ்ந்தும் இருக் கிறதென்று தெரிகிறதல்லவா? இங் கே ஜனநெருக்கம் மிகவும் அதிகம். வைகை யாற்றுக்கு வடக்கே யுள்ள நிலங்களில் பெரியாற்று ஜலம் பாய் கிறது. இங்கு நெல்விளைவு அதிகம்.

முக்கிய ஊர்கள்

1. மதுரை:—182,018 இதுஇந்த ஜில்லாவின் முக்கிய பட்டணம். இது வைகை யாற்றின் இரு புறங் களிலும் அமைந்திருக்கிறது. என் ருலும், இந்நகரத்து ஜனங்களில் பெரும்பான்மையோர் இதன் தென் கரையிலேயே வசிக்கிருர்கள். இது ஒரு ரயில்வே ஜங்ஷன். இங்கிருந்து நான்கு பக்கங்களிலும் இருப்புப் பாதைகளும் ரஸ்தாக்களும் செல்லு கின்றன. இந்நகரத்தின் விசேஷங் களைப் பற்றி நாம் முன்பே படித்தி ருக்கிறோம்.

2. அவனியாபுரம்:— இது மதுரைக்குத் தெற்கில் 2மைல் தூரத் திலிருக்கிறது. இங்கே மதுரை முனிசிபாலிட்டியாரால் நடத்தும் விவசாயப்பண்ணை இருக்கிறது.

3. பசுமலை:— இது மதுரைக்குத் தெற்கே சுமார் 2 மைல் தூரத்தி லிருக்கிறது. இது ஒரு ரெயில்வே ஸ்டேஷன். இங்கே அமெரிக்கன் மிஷன் பாதிரியார்களால் நடத்தப் படுகிற ஒரு ஹைஸ்கூலும், டிரெயி

னிங் ஸ்கூலும், தொழிற் கல்விப் பள்ளிக் கூடங்களும், விவசாயப் பண்ணைகளு மிருக்கின்றன. இங்கே மகாலக்ஷ்மி மில் என்று பெயருள்ள ஒரு நூல் நூற்கும் இயந்திர சாலையு மிருக்கிறது. இங்குள்ள குன்றி லிருந்து ரஸ்தாப் போடுவதற்குச் சரளைக் கற்கள் மற்ற இடங்களுக்குக் கொண்டுபோகப்படுகின்றன.



திருப்பரங்குன்றம்

4. திருப்பரங்குன்றம்:— இது மதுரைக்குத் தென் மேற்கிலுள்ள ஒரு சுப்பிரமணிய ஸ்தலம். மாதந் தோறும் கார்த்திகைக்கு இங்குஏராள மான ஜனங்கள் வருகிறார்கள். சிக் கந்தர் என்ற ஒரு மகமதியரின் சமா தியும் இங்குள்ள மலைமேல் ஒரு பாகத்தில் இருக்கிறது.

5. யானைமலை:—இது மதுரைக்கு வடக்கே சுமார் 6 மைல் தூரத்தி லிருக்கிறது. இதன் நீளம் 2 மைல் இது ஒரு கற்குன்று. இங்கே முன் காலத்தில் கட்டப்பட்ட ஒருவிஷ்ணு கோவில் இருக்கிறது. இங்குள்ள மலையின் குகையில் ஜயின விக்கிரகங் களைக் காணலாம்.

6. வெள்ளியக் குன்றம், சிறுமலை ஆகிய இவையிரண்டும் இந்தத் தாலுகாவிலுள்ள ஜமீன் ஊர்கள்.

2. திருமங்கலம் தாலுகா

இது நமது ஜில்லாவின் தென் பாகத்திலிருக்கிறது. இதன் எல்லை களைப் படத்தில் பார்த்துச் சொல்லு ங்கள். இந்தத் தாலுகா முழுவதும் கரிசல் மண் நிறைந்த பிரதேசம். இங்குப் பருத்தி ஏராளமாய்ப் பயிரா கிறது. இத்தாலுகாவில் வடக்கில் நாகமலைத் தொடரும், மேற்கில் வருஷநாடு, ஆண்டிபட்டி மலைத் தொடர்களும் இருக்கின்றன. இங்கு ஆறுகள் விசேஷமா யில்லாததால் கிணற்று நீரை இறைத்துத்தான் விவசாயம் செய்கிறார்கள். இந்தத் தாலுகாவில் இருப்புப் பாதைகள் எந்தத் திசையில் செல்லுகின்றன? அதன் மேலுள்ள பட்டணங்களைச் சொல்லுங்கள்.

1. திருமங்கலம்:— இது குண்டா ற்றங்கரையி லிருக்கிறது. இங்கு வெள்ளிக்கிழமைதோறும் சந்தை கூடுகிறது. இங்கு ஒரு பஞ்சாலை உண்டு. இங்கே தாலுகாக் கச்சேரி யும், ரிஜிஸ்டர் ஆபீசும் இருக் கின்றன.

2. சிவரக்கோட்டை:— இங்கே பருத்தியும், புன்செய்த் தானியங்க ளும் விளைகின்றன.

3. கள்ளிக்குடி:—இது திருமங்கலத்துக்குத் தெற்கே சுமார் 9 மைல் தூரத்திலிருக்கிறது. இங்கே ஒரு சப்ரிஜிஸ்டர் ஆபீசும், லோக்கல் பண்டு சத்திரமும் உண்டு. இதைச் சுற்றி விளையும் பருத்தி வியாபாரத்துக்கு இது ஒரு மத்திய ஸ்தலமாக இருக்கிறது. இதன் மேற்கிலுள்ள ஒரு கற்பாறையிலிருந்து ஒருவிதமான சிறந்த கல் வெட்டி யெடுக்கப்படுகிறது.

4. கல்லுப்பட்டி:—இங்குப்பருத்தி விளைவு அதிகம்.

5. சாத்தங்குடி;—இவ்வூரில் கம்பி மடித்துண்டுகளும், கதர்த்துணிகளும் நெசவு செய்கிறார்கள்.

6. உசிலம்பட்டி:— இது ஒரு யூனியன் பட்டணம். இங்கு டிவிஷனல் ஆபீஸர் கச்சேரியும், ஹைஸ்கூலுமிருக்கின்றன. இங்குக் கவர்மெண்டார் ஜனங்களின் நன்மைக்காக ஒரு விவசாயப் பள்ளிக்கூடத்தையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இங்கே புதன்கிழமை தோறும் ஒரு பெரிய சந்தை கூடும்.

7. நடுக்கோட்டை, மேலக் கோட்டை, உத்தமநாயக்கனூர், எழுமலை, சாப்டூர், பேரையூர், தொட்டப்ப நாயக்கனூர், சந்தையூர், முதலியன இத்தாலுகாவில் முக்கிய ஜமீன் ஊர்கள்.

3. பெரியகுளம் தாலுகா

இது நமது ஜில்லாவில் தென் மேற்குப் பாகத்திலிருக்கிறது. நமது ஜில்லாவிலுள்ள மற்றெல்லாத்தாலுகாக்களிலும் இதுபெரிது; மிகவும் செழிப்பானது. இதற்கு ஆதியில் தென்கரைத்தாலுகாஎன்பது பெயர். பெரியாற்றின் ஜலத்தை வைகையில் திருப்பி விட்டதின் காரணமாக இத்தாலுகாவின் தென்பாகம் செழிப்பாயிருக்கிறது. இந்தத் தாலுகாவில் மேற்கிலும் கிழக்கிலும் மலைவரிசைகளைப் பார். இங்கே ஜனத்தொகை குறைவு. ஏன்? இத்தாலுகாவின் பெரும்பான்மையான பாகம் மலை அடர்ந்ததாகவும் பீடபூமி நிறைந்ததாகவும் உள்ளது. வைகை நதியும் அதன் உபநதிகளாகிய சுருளி, வராகநதி முதலியவை பாயப்பெற்ற பிரதேசத்தில் நெல்லும், செம்மண் தரை யுள்ள மேட்டு நிலங்களில் எள்ளு, பயறுகள், துவரை, சோளம், கேப்பை, பருத்தி முதலியவைகளும் பயிராகின்றன. மலைச் சாரல்களில் காப்பி, ஏலக்காய் விளைகின்றன. மலை, காடுகளில் சந்தன மரமும், கட்டடங்களுக்கு வேண்டிய தேக்கு முதலிய மரங்களும் கிடைக்கின்றன.

1. பெரியகுளம்:—(23004) இது வராக நதிக்கரையிலிருக்கிறது. இங்கே ஒரு ஹைஸ்கூலும், தாலுகா கச்சேரியும், சப்ரிஜிஸ்டர் ஆபீசும் இருக்கின்றன. இங்குள்ள ஜனங்கள் பாத்திரங்களும், நெசவுத்தொழிலும் செய்கிறார்கள். இது ஒரு முனிசிபல் பட்டணம்.

2. தேனி:— இது யூனியன் டவுன். ஞாயிற்றுக்கிழமை தோறும் இங்கே பெரிய சந்தை கூடும். இத்தாலுகாவில் இது முக்கிய வியாபார ஸ்தலம். இதன் பக்கத்திலுள்ள அல்லி நகரத்துக்கு 2 மைல் தூரத்தில் தேனி நதியும், சுருளி நதியும் கலக்கின்றன. அதற்கும் கிழக்கே 2 மைல் தூரத்தில் வைகை, சுருளி நதிகள் சந்திக்கின்றன.

3. சின்னமனூர்:—இது ஒரு யூனியன் பட்டணம். இங்குப் பிராமணர்களும் மகமதியர்களும் அதிகமாய்

வசிக்கிருர்கள். நெல் விளைவு அதிகம். இராஜசிம்ம பாண்டியனுல் கட்டப்பட்ட ஒரு கோவில் இங்கு இருக்கிறது.

4. கம்பம்:— இது ஒரு யூனியன் பட்டணம். இதில் வசிக்கும் ஜனங்களில் பெரும்பாலோர் கன்னடம் பேசும் காபிலியர்கள். இது ஒரு பள்ளத்தாக்கிலிருக்கிறது. இந்தப் பள்ளத்தாக்கு அதிகக் குளிர்ச்சியும் ஈரமும் பொருந்தியது. தொத்து வியாதிகள் உண்டாகும் இடம் இது. இப்பிரதேசத்தைச் சுற்றிலும் விளைகிற தானியங்களின் வியாபாரத்துக்கு இது ஒரு மத்திய ஸ்தலமாக இருக்கிறது. இதன் கிழக்கிலும் மேற்கிலும் அடர்ந்த காடுகளிருக்கின்றன.

5. கூடலூர்:—இது ஒரு யூனியன் டவுன். இங்கு ஒரு அழகர் கோவிலிருக்கிறது. இங்கிருந்து பெரியாற்று அணைக்குப் போகலாம்.

6. உத்தமபாளையம்:— இது சுருளி நதியின் தென்பாகத்திலிருக்கிறது. இதில் ஒரு டிப்டி தாசில்தார் ஆபீசும், சப்ரிஜிஸ்டர் ஆபீசும், பிரயாணிகள் தங்குவதற்கு ஒரு சத்திரமும் இருக்கின்றன. இங்குள்ள காளாஸ்திரி கோவிலும், திரௌபதை அம்மன் கோவிலும் பேர்போனவை. இங்கே பெரியாற்று நீர் பாய்வதால் நிலங்கள் வளம் பெற்று நெல் அதிகமாக விளைகிறது.

7. கோம்பை:—இது இத்தாலுகாவின் மலை மீதுள்ளது. இது சிறந்த நாய்களுக்குப் பெயர்போனது.

8. போடி நாயக்கனூர்.—(27046) இது ஒரு முனிசிபல் பட்டணம். இங்கேஒரு ஹைஸ்கூல் இருக்கிறது. இது, தேயிலை, காப்பி, ஏலக்காய்த் தோட்டங்களுக்குப் போகும் பாதையிலிருப்பதால் வியாபாரத்தில் முன்னேற்றமடைந்து வருகிறது. இங்குள்ள (Rope way) கம்பிப்பாதையில் தேவி குளம் மலையில் விளையும் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

4. கோடைக்கானல் தாலூகா

இது நமது ஜில்லாவில் மேற்கிலிருக்கிறது. இதுவே நமது ஜில்லாவில் மிகவும் மலையடர்ந்த தாலூகா. இதில் முக்கியமான இடம் கொடைக்கானல் என்பது. இது சமுத்திர மட்டத்துக்குமேல் சுமார் 7500 அடி உயரத்திலிருக்கிறது. இங்குத் தனவந்தர்கள் கோடைக்காலத்தில் சௌகரியத்திற்காகச் செல்லுகிருர்கள். இதைச் சுற்றிலுமுள்ள பிரதேசங்களில் இங்கிலீஷ் காய்கறிகளும் முட்டைக்கோஸ் கீரையும், பழ வர்க்கங்களும் பயிராகின்றன. இங்குள்ள காடுகளில் சிங்கோனு, கற்பூரம் முதலிய மரங்களைக் காணலாம். இது ஒரு முனிசிபல் பட்டணம். இதன் ஜனத்தொகை 6523.

2. பூம்பாரை:—இது கொடைக்கானலுக்கு வடமேற்கில் 10 மைல் தூரத்திலிருக்கிறது. இங்கே பலிங்கர்களிருக்கிருர்கள் ; காப்பிக் கொட்டை வெள்ளைப் பூண்டுகள் விளைகின்றன.

3. தாண்டிக்குடி:—இங்கே பூர்வீகக் கல்லறைகள் இருக்கின்றன.

4. பண்ணைக்காடு:—இங்குக் காப்பி, ஏலம், கடுக்காய், வாழைப்பழம், ஆரஞ்சுப்பழம் ஏற்றுமதியாகின்றன.

5. செம்பகனூர்:—இங்குக் காய்கறித் தோட்டங்களும், சோலைகளும் அதிகம்.

5. பழனித் தாலுகா

இது நமது ஜில்லாவில் வடமேற்கிலிருக்கிறது. இது தெற்கே உயர்ந்தும், வடக்கே சரிவாகவுமிருக்கிறது. இதன் தென்பாக மலைத் தொடருக்குப் பழனிமலை யென்பது பெயர். இதில் செல்லும் இருப்புப் பாதை மார்க்கம் இதன் நடுவில் கிழக்கு மேற்காகச் செல்லுகிறது. இத் தாலுகா மற்றெல்லாத் தாலுகாக்களைவிட மிகவும் வறட்சியானது. இங்கு மழை மிகக் குறைவு. இது செம்மண் நிறைந்தபிரதேசம். இங்குக் கிணற்று நீர் பாய்ச்சிச் சோளம், கம்பு, கேப்பை, புகையிலை, பருத்தி முதலியன சாகுபடி செய்கிறார்கள். இங்குள்ள நதிகளில் ஷண்முக நதி விசேஷமானது. அந்நதி செல்லுமிடங்கள் வண்டல்கள் நிரம்பியுள்ளன; நெல், வெற்றிலை சாகுபடி செய்யப்படுகின்றன.

இத் தாலுகாவின் எல்லைகளைப் படத்தில் பார்த்துச் சொல்லு.

1. பழனி:—(18899) இது இத்தாலுகாவின் முக்கிய பட்டணம். இது ஒரு முனிசிபல் நகரம். இங்குள்ள சுப்பிரமணியர் கோவில் மிகவும் பிரசித்திபெற்றது. இங்குத்தாலுகாக் கச்சேரியும், முனிசிபல் ஹைஸ்கூலும், அநேக சத்திரங்களுமிருக்கின்றன. இது ஒரு வியாபார ஸ்தலம். இங்கு மலைமீதுள்ள பழனியாண்டவர் தெரிசனத்துக்குப் பல ஊர்களி லிருந்தும் ஏராளமான ஜனங்கள் எப்பொழுதும் வந்துகொண்டிருக்கிறார்கள்.

2. கீரனூர்:—இது பழனிக்கு வடக்கே சுமார் 10 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கே மகமதியர் அதிகம். இது சண்முகநதிக் கரையிலிருப்பதால் நெல், புகையிலை, வெற்றிலை முதலிய வியாபாரத்துக்குப் பெயர்போனது.

3. விருப்பாக்ஷி:—வாழை, பலாப் பழத்துக்குப் பேர்போனது; வியாழக்கிழமைதோறும் சந்தை கூடும்.

4. ஆய்க்குடி, மாம்பாரை, இடையகோட்டை ஆகிய இவைகள் இத் தாலுகாவிலுள்ள முக்கிய ஜமீன்கள்.

6. திண்டுக்கல் தாலுகா.

இது நமது ஜில்லாவின் வடக்கிலிருக்கிறது. இத் தாலுகா, தெற்கிலுயர்ந்தும், வடக்கில் தாழ்ந்துமிருக்கிறது. இது ஒரு மேடான பிரதேசம். மழை மிகவும் குறைவு. இதன் தெற்கிலுள்ள மலைகளில் வாழை விசேஷம். இங்குள்ள தரை செம்மண் பூமி. ஆகையால் வேர்க்கடலை, கொட்டைமுத்து, உளுந்து, துவரை, புகையிலை முதலானவை விசேஷமாய்ப் பயிராகின்றன. இதன் எல்லைகளையும், இங்கு ஓடும் நதிகளையும் படத்தில் பார்த்துச் சொல்லுங்கள்.

1. திண்டுக்கல்:—(43617) இது இத்தாலுகாவின் தலை நகர். இங்குச் சப் கலெக்டர் இருக்கிறார். இங்கே இரண்டு ஹை ஸ்கூல்களும், ஒரு டிரெயினிங் ஸ்கூலும், தாலுகாக் கச்சேரியுமிருக்கின்றன இங்கிருந்து சுருட்டு, தோல், வெண்கலப் பாத்திரங்கள், இரும்புப்பெட்டிகள், பூட்டுகள் முதலியவை ஏற்றுமதியாகின்றன. இது ஒரு முனிசிபல் பட்டணம். இங்குள்ள குன்றின்மேல் ஒரு கோட்டை இருக்கிறது. முற்காலத்தில் பலமுறை யுத்தம் நடந்த இடம் இது.

2. ஆத்தூர் :—இங்கிருந்து கீழ்ப் பழனிமலைக்குப் பாதை போகிறது. இங்குள்ளவர்கள் காளியம்மனுக்கு வருஷந்தோறும் எருமைக்கடா பலி கொடுப்பார்கள்.

3. அய்யம்பாளையம்:—இது யூனியன் டவுன். இங்கே தேங்காயும், மாம்பழமும், மலையில் விளையும் பொருள்களும் ஏற்றுமதியாகின்றன.

4. பலக்கனூத்து :—இது திண்டுக் கல்லிலிருந்து பழனிக்குப் போகும் பாதையிலிருக்கிறது. இதில் ஒரு சத்திரமும்,முசாபரி பங்களாவும் உண்டு. இங்கேயுள்ள செம்மண்ணில் தங்கத் தூள் கலந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

5. அகரம் :—இங்குள்ள முத்தாலம்மன்கோவில் உற்சவம் விசேஷம்.

6. வேடசெந்தூர்:—இது ஒரு யூனியன் பட்டணம். இங்கே டிப்டிதாசில்தார் ஆபீசும், மற்ற ஆபீசுகளும் இருக்கின்றன. இங்கு நெல்லும், புகையிலையும் விசேஷமாய் விளைகின்றன. வாரம் தோறும் ஒரு பெரிய சந்தை கூடுகிறது.

7. தாடிக்கொம்பு :—இது ஒரு விஷ்ணு ஸ்தலம்; திண்டுக்கல்லுக்கு வடக்கே 6 மைல் தூரத்திலுள்ளது. இங்குச் சித்திரை மாதம் தோறும் பெரிய உத்ஸவம் நடைபெறுகிறது.

7. நிலக்கோட்டைத் தாலுகா.

இது நமது ஜில்லாவின் நடுவிலிருக்கிறது. இதைச் சுற்றிலும் உள்ள தாலுகாக்களைப் படத்தில் பார்த்துச் சொல்லுங்கள். இத்தாலுகாவில் பெயர் பெற்ற பேரணையும், சிற்றணையும் இருக்கின்றன. நான்கு பக்கங்களிலுமுள்ள மலைகளைப் படத்தில் பார். பழனிமலையிலிருந்து இங்கு வரும் மஞ்சள் ஆற்றில் வருடமுழுவதும் தண்ணீர் ஓடுகிறது.

1. நிலக்கோட்டை :—இது இந்தத் தாலுகாவின் தலை நகரம். இங்கே தாலுகா கச்சேரியும், பல ஆபீசுகளுமிருக்கின்றன. இங்கேபாத்திரங்களும் செய்யப்படுகின்றன.

2. அம்மையநாயக்கனூர்:—இது ஒரு ரெயில்வே ஸ்டேஷன். இதிலிறங்கிக் கொடைக்கானல் மலைக்கு ஜனங்கள் செல்லுகிறார்கள். இது 1736-ம் வருடம் மகமதிய அரசர்களுக்கும், நாயக்க மன்னர்களுக்கும் யுத்தம் நடந்த இடம்; மலைகள் நிறைந்த இடம்.

3. குலசேகரன் கோட்டை:—இது சிறு மலையின் அடிவாரத்திலிருக்கிறது. இங்கே பெரிய குகைகளும் கல்லறைகளும் இருக்கின்றன.

4. சோழவந்தான்:—இது வைகையாற்றின் கரையிலிருக்கிறது. இது, ஒரு செழிப்பான ஊர். இங்கே தென்னந் தோப்புகளும், நெல் விளைவும் அதிகம். இதில் ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது. முற்காலத்தில் சோழ ராஜா ஒருவர் பாண்டிய ராஜாவை முறியடித்தார் என்பது தெரிகிறது.

5. பேரணை .—இங்கே வைகையாற்றில் அணைகட்டி, பெரியாற்றுத் தண்ணீரைத்தேக்கிப் பலபாகங்களுக்கும் அனுப்புகிறார்கள். இங்குள்ள அநுமார் கோவில் விசேடமானது.

6. வத்தலக் குண்டு:—இது இத்தாலுகாவிலுள்ள பெரிய ஊர். இது கொடைக்கானல் மலைக்குப் போகிற வழியிலிருக்கிறது. இங்கு ஒரு விதமான சம்பா நெல் விசேடமாக விளைகிறது. இங்கே ஒரு ஹைஸ்கூலும் இருக்கிறது.

மேலூர்த் தாலுகா

இது நமது ஜில்லாவின் கிழக்குப் பாகத்தி லிருக்கிறது. இதன் தென் பாகம் பெரியாற்றுக் கால் வாயின் ஜலத்தினல் செழிப்பாயிருக்கிறது. வடபாகம் ஒரு மேட்டுப் பிரதேசம். இதன் மேற்கு எல்லையாயுள்ள தாலூகாக்களைச் சொல்லுங்கள். இதன் தென் பாகத்தில் நெல்லும், வடபாகத்தில் கொட்டை முத்து, சோளம், கேப்பை, பயறு வகைகளும் விசேஷமாய்ப் பயிராகின்றன. இத் தாலுகாவில் 5-ல் ஒரு பாகம் காடுகள். அங்கிருந்து விறகு ஏராளமாக வெட்டப் படுகின்றன. வடபாகத்தில் புளியந் தோப்புகள் அதிகம். இத் தாலுகாவிலுள்ள திருமணி முத்தாறு, பாலாறு இவைகளின் ஓரங்களில் தென்னந் தோப்புகள் அதிகம்.

1. மேலூர் :—இது ஒரு டிப்டி கலெக்டர் டிவிஷன். ஆனல் ஆபீஸ் மதுரையிலிருக்கிறது. இங்கு ஒரு ஹைஸ்கூலும் தாலுகாக் கச்சேரியும் மற்ற ஆபிஸ்களு மிருக்கின்றன. நெல் விளைவு அதிகம். இங்கே கள்ளர்கள் மிகுதி.

2. திருவாதவூர் :—இது மேலூருக்குத் தெற்கே 5 மைல் தூரத்திலிருக்கிறது. இது மாணிக்க வாசகர் என்ற சிவ பக்தர் பிறந்த இடம்.

3. அழகர்மலை :—மதுரைக்கு வடக்கே சுமார் 12 மைல் தூரத்தி லுள்ளது. இம்மலையின் அடிவாரத்தில் அழகர் கோயிலிருக்கிறது. இங்குள்ள அழகிய மூர்த்தியைத்தரிசிக்கத் தினந்தோறும் யாத்திரிகர்கள் வருகிறார்கள். இங்குச் சித்திரை, ஆடி மாத உற்சவங்கள் நடக்கும். இம் மலையில் மருந்துக்கான மூலிகைகள் கிடைக்கின்றன.

4. நத்தம்:—இது திருமணிநதிக் கரையிலுள்ள ஒரு யூனியன் டவுன். இது சிறுமலைக்கும், அழகர் மலைக்கும் மத்தியில் உள்ள கணவாயில் இருக்கிறது. இங்கு எண்ணெய் வியாபாரம் அதிகம்.

5. கோட்டாம் பட்டி :—இதனருகில் உள்ள பாறைகளில் இரும்பு அகப்படுவதாகச் சொல்லுகிறார்கள். இதன் வடக்கில் பாலாறு ஓடுகிறது. இரு கரைகளிலும் தென்னந் தோப்புகள் அதிகம்.

பயிற்சி

1. நமது ஜில்லாவை எத்தனை தாலுகாக்களாகப் பிரித்திருக்கிறார்கள்.
2. நமது தாலுகாக்களில் மிகப் பெரியது [எது?
3. மிகச் சிறியது எது?
4. நடுவில் உள்ள தாலுகா எது ?
5. எத்தாலுகாவில் கரிசல் மண் அதிகம்?
6. எத் தாலுகாக்களில் செவ்வல் மண் பிரதேசம் நிறைந்திருக்கிறது ?
7. பெரிய குளம் மிக்க செழிப்புள்ள தாலுகாவான போதிலும், அதற்குத் தகுந்த ஜனத்தொகை அதிக மில்லை. ஏன் ?
8. ஜன நெருக்க முள்ள தாலுகாக்கள் [யாவை ?
9. மலை யடர்ந்த தாலுகா எது ?
10. தேனியிலிருந்து தெற்கேபெரியாற்று ஏரிக்குச் செல்லும் ரஸ்தாவின் மேல் உள்ள பட்டணங்கள்மூன்றுசொல்லு.
11. பெரிய குளம் தாலுகாவில் மழை குறைவு. ஏன்?
12. இந்த ஜில்லாவில் மிகவும் வறட்சியான தாலுகா எது? அதில் உள்ள மூன்று பட்டணங்கள் சொல்லு.
13. திருமங்கலம்தாலுகாவில்உள்ளஜமீன் ஊர்கள் யாவை ?
14. கன்னிவாடி, திருவாதவூர், கூடலூர் ஆகிய இவை எந்தத் தாலுகாக்களில் இருக்கின்றன? இவற்றின் விசேஷ மென்ன ?
15. நத்தம், வத்தலக்குண்டு, அம்பாத்துரை ஆகிய இவைஎவற்றிற்குப்பேர் போனவை ?

மதுரை ஜில்லா சரித்திரச் சுருக்கம்

நெடுநாளாக நமது நாட்டுக்குப் பாண்டிய நாடு என்பது பெயர். ஆதி காலத்தில் இந்த ஜில்லா முழுவதும் மரங்கள் அடர்ந்த காடாயிருந்தது; நாகரிக மற்ற ஜாதியார் வசித்து வந்தார்கள். அவர்கள் கருங்கல்லால் செய்யப்பட்ட ஆயுதங்களை உபயோகித்துவந்ததால், கற்காலமனிதர்கள் என்பது அவர்கள் பெயர்.

பாண்டியர்கள்

சுமார் 3000 வருஷங்களுக்கு முன்னரே பாண்டியர் என்னும் பட்டப் பேருடைய அரசர்கள் இந்நாட்டை ஆண்டுவந்தார்கள். கடைசித் தமிழ்ச் சங்கம் உக்கிரப் பெருவழுதிப் பாண்டியன் காலத்தில் இருந்தது. அக்காலத்தில் தான் நக்கீரர், சாத்தனுர் முதலிய 49 தமிழ்ப்புலவர்கள் இருந்தார்கள். நம் நாட்டார் அக்காலத்திலேயே மிகவும் நாகரிக முற்றவர்கள் என்பது தெரிகிறது.

பாண்டியரும் அவர் பிரஜைகளும் சமண மதத்தைத் தழுவினுர்கள். அவர் மனைவி மங்கையர்க்கரசியார் இந்து மதத்தையே தழுவினர். சீர்காழியில் அவதரித்த திருஞான சம்பந்தர் மதுரை அடைந்து, சமணர்களால் சொஸ்தப்படுத்த முடியாத கூன்பாண்டியன் சுரத்தைச் சொஸ்தப்படுத்தி, அவரைச் சைவர் ஆக்கிச் சமணர்களைக் கழுவேற்றச் செய்தார்.

சோழ, பாண்டியர்கள்

பிறகு, சோழர்கள் பாண்டியர்களை வென்று, 300 வருஷகாலம் ஆண்டார்கள். அவர்களில் முக்கியமானவன் இராஜ இராஜ சோழன். இவ்வாறிருக்கையில் மாறர் சுந்தரபாண்டியர் சோழனை ஜயித்துப் பாண்டிய நாட்டை ஆண்டார். அதற்குப் பிறகு வந்த ஜடவர் சுந்தரபாண்டியர் இலங்கையைப் படையெடுத்து ஜயித்து, மிக்க பொருள் கொண்டு வந்தார்.

மகமதியர்

15வது நூற்முண்டில் அலாவுத்தீன் சேனைத் தலைவன் மாலிக்காபர் தென்னிந்தியாவின் மேல் படையெடுத்து மதுரையை எதிர்த்தான். அப்பொழுது மதுரையை ஆண்ட ராஜசிம்ம பாண்டியன் பெரியகுளத்துக்கடுத்த சின்னமனூரில் ஓடி ஒளிந்துகொண்டான்; அங்குள்ள ராஜசிம்மேசுவரர் கோவிலை அப்பொழுது கட்டினுன்.

அதன்பிறகு, எட்டு மகமதிய அரசர்கள் நமது நாட்டை ஆண்டார்கள்.

ஹோயஸ்லோ வம்சத்தைச்சேர்ந்த ஒரு ஹிந்து அரசர் தமது தலைவரான கம்பன்ன உடையாரை அனுப்பி, மகமதியர்களை மதுரையிலிருந்து துரத்திவிட்டார். 1559-ம் வருஷத்தில் வீரசேகரசோழன், பாண்டியரைத் தோற்கடித்து, இந்நாட்டைக் கைப்பற்றினுன். பாண்டியன் விஜயநகர சக்கரவர்த்தியிடம் முறையிட, அவர் தமது சேனைத் தலைவரா

கிய நாகம நாயக்கரை அனுப்பி, தம் சிற்றரசனுயிருந்தும், தமது உத்தர வில்லாமல் மதுரையைக் கைப்பற்றிய சோழனைத் துரத்தும்படி சொன்னார். நாகம நாயக்கர் அப்படியே செய்து, பாண்டியனிடம் இராச்சியத்தை ஒப்புவிக்காமல் தாமே ஆண்டார். விஜயநகரத்தரசர் விசனமடைய, நாகம நாயக்கர் மகன் விசுவநாத நாயக்கர் சென்று, தம் தகப்பனரை வென்று, அவரைச் சிறைப்படுத்தி, அரசர் முன் நிறுத்தினர். அவரே தம் தகப்பனருக்கும் விடுதலை வாங்கிக்கொடுத்தார். அரசரும் விஸ்வநாதரை மதுரைக்கு அரசராக நியமித்தார்.

நாயக்கர்கள்.

விசுவநாதரே மதுரையை ஆண்ட நாயக்க அரசர்களில் முதல்வர்; அநேக நன்மைகளைச் செய்தார்; வைகையாற்றில், பேரணை சிற்றணைகளைக் கட்டி நாட்டைச் செழிப்பித்தார். வல்லத்தைச் சோழனுக்குக் கொடுத்துவிட்டு, அவனிடமிருந்து திருச்சிராப்பள்ளியை வாங்கிக் கொண்டு, அங்கிருந்தே இந்நாட்டை ஆண்டுவந்தார். அவர் மந்திரி அரிய நாயக்க முதலியார், மீனுட்சி அம்மன் கோவிலில் உள்ள ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டினவர். விசுவநாதர் காலத்தில் இருந்து நாயக்க மன்னர்களே நமது நாட்டை ஆண்டு வந்தார்கள்.

விசுவ நாதருக்குப் பின் அவருடைய பரம்பரையில் ஒன்பதாம் தலைமுறையில் ஆட்சி செய்த திருமலை நாயக்கரால் மஹால், பெரிய தெப்பக்குளம், புதுமண்டபம், ராயகோபுரம், மீனுட்சியம்மை கோவிலில் சில பகுதிகளும் கட்டப்பட்டன. கட்டிடங்களில் அனுவசியமாய்ப் பணத்தைச் செலவழித்ததும் அல்லாமல், மகாமதியர்களுக்கும் சண்டை விஷயமாய்ப் பணம் கொடுத்ததால், பின் அரசர்களுக்குப் பணம் இல்லாமல் போயிற்று. திருமலை நாயக்கர் இறந்தார். அவருக்குப்பின், அவர்மகன் முத்துத் திருமலை திடீரென இறக்க, அவர் மகன் சோமநாத நாயக்கன் பட்டத்துக்கு வந்தான். மைசூர் அரசன் மதுரையை எதிர்க்க, சொக்கநாதர் தஞ்சாவூர் மஹாராஷ்டிரர்களைச் சேர்த்துக்கொண்டு அவரைத்துரத்தி விட்டார். பிறகு மகாராஷ்டிரர்களே எதிர்த்தார்கள். திடீரென்று அவர் இறந்தார். இவர் மனைவி மங்கம்மாள் அக்கால வழக்கம்போல் உடன் கட்டை ஏருமலிருந்தாள்.

சொக்கநாதருக்குப் பின் அவர் மகனும், இளமையில் இறக்கவே, பேரப்பிள்ளையாகிய விஜயரங்கசொக்கநாதர் அரசரானர். குழந்தைக்குத் தக்க வயது வரும் வரையில் பாட்டியாராகிய மங்கம்மாள் அரசாள நேர்ந்தது.

மங்கம்மாள்.

மங்கம்மாள் அரசாட்சி பிரசித்தி பெற்றது. அவர் யாத்திரிகர்களுக்குச் சாலைகளும், அன்னதானச் சத்திரங்களும் ஏற்படுத்தி, வைத்தியசாலைகளும், பாடசாலைகளும் உண்டாக்கி அநேக நன்மைகள் செய்தார். விஜயரங்கனுக்குத் தக்க பருவம் வந்தவுடன் இராச்சியத்தை அவனிடம் ஒப்புவித்து விட்டார். அவருடைய அரண்மனையில்தான் இப்பொழுது ஸென்ட்ரல் மார்க்கெட் இருக்கிறது. அதற்கு எதிரில் ஹால்பார்க் உள்ளது.

விஜயரங்கன் பிள்ளை இல்லாமல் இறக்கவே, அவனுடைய மனைவி

மீனுட்சி அம்மாள் ஒரு மகனைச் சுவீகாரம்செய்துகொண்டாள். பையன் சிறுவனுயிருந்தபடியால், மீனுட்சி தானே அவனுக்குப் பதிலாக ஆண்டு வந்தாள். அப்பையன் தகப்பன் பங்காரு, தான் ஆள எண்ணிச் சண்டையிட்டான். இருவரும் கர்நாடகநவாப் முகம்மது ஆலியிடம் முறையிட்டார்கள். நவாபு பங்காருவைத் துரத்திவிட்டு, மீனுட்சியைச் சிறையிலிட்டு, நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். மீனுட்சி சிறையில் தற்கொலை செய்து கொண்டாள். கான்சா என்னும் ஒரு மகமதியரை மதுரைக்குக் கவர்னராக முகம்மது ஆலி நியமித்தார். பின்னர், மைசூர் ஹைதர் ஆலி, கர்னுடக நவாப்பாகிய முகம்மது ஆலியை எதிர்த்தான். இங்கிலீஷ்காரர்கள் முகம்மது ஆலிக்கு உதவி செய்தார்கள். அவர்களுக்கு நேர்ந்த செலவுக்காகச் சேலம், மதுரை முதலிய வற்றின் வருமானத்தை வசூல் செய்துகொள்ளும்படி முகம்மது ஆலி அவர்களுக்கு உத்தரவு செய்தார். அன்று முதல் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் வரியை வசூல் செய்துவந்தார்கள். கான்சா வரி கொடாமல் எதிர்த்தான். ஆதலால், இங்கிலீஷ்காரர் கான்சாகிபைக் கொன்றுவிட்டார்கள். அவருடைய சமாதி மதுரைக்கு மேற்கே வைகை நதிக்குத் தென்பக்கம் சம்மட்டிபுரம் என்னுமிடத்திலிருக்கிறது. அதன் பின்னர், 1801-ம் வருஷம் முதல், அநேகமாய்த் தென்னிந்தியா முழுதும் இங்கிலீஷ்காரரிடம் வந்தது.

பயிற்சி

1. தமிழ்ச் சங்கம் எந்தப் பாண்டிய அரசன் காலத்தில் ஸ்தாபிக்கப் பட்டது?
2. திருஞான சம்பந்தர் பிறந்த இடம் எது?
3. அவர் காலத்தில் இருந்த பாண்டிய அரசன் யார்?
4. மகமதியர்கள் எப்பொழுது மதுரையைப் படை எடுத்து வந்தனர்?
5. மதுரையை ஆண்ட முதல் நாயக்க அரசர் யார்?
6. அவர் ஜனங்களுக்குச் செய்த நன்மைகள் எவை?
7. மதுரை எவ்வாறு இங்கிலீஷ்காரர் வசமாயிற்று?

உலக விஷயங்கள்



சிறுவர்களே! நாம் வசிக்கும் ஜில்லாவானது பூகோளத்தின் ஒரு சிறு பகுதி என்பதை அறிந்து கொள்ளுங்கள். பூமியானது ஒரு உருண்டை வடிவமாக இருக்கிறது. அதனுடைய மத்தியபாகத்தின் சுற்றளவு சுமார் 25,000 மைல் ஆகும். இப்பெரிய உருண்டையின் பெரும்பாலான பாகங்கள் தண்ணீர் நிறைந்த சமுத்திரத்தால் சூழப்பட்டிருக்கின்றன. மற்ற இடங்கள் ஜனங்கள் வசிப்பதற்குரிய பூ பாகமாக இருக்கின்றன. பூமியை இரண்டு பாகங்களாகப் பிரித்திருக்கிறார்கள். கிழக்குப் பாகத்தில் மேற்குப் பாகத்தைவிடப் பூபாகம் அதிகமாயிருக்கிறது.

பூமியின் பெரிய பாகங்கள் கண்டங்களென்று சொல்லப்படுகின்றன. அக் கண்டங்களாவன.

(1) ஆசியா (2) ஐரோப்பா (3) ஆப்பிரிக்கா (4) ஆஸ்திரேலியா (5) அமெரிக்கா என்பனவாம்.

இவற்றுள் முதல் நான்கு கண்டங்கள் கிழக்குப் பாகத்திலும், ஐந்தாவதான அமெரிக்கா என்னும் பெரிய கண்டம் மேற்குப் பாகத்திலும் அமைந் துள்ளன. அமெரிக்கா பெரிய பூபாகமாயிருப்பதால் அது வட அமெரிக்கா என்றும், தென் அமெரிக்கா என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது.

பூமியைச் சுற்றியுள்ள சமுத்திரங்கள் ஐந்து:—அவைகள் முறையே பசிபிக் மகா சமுத்திரம், அட்லாண்டிக் மகா சமுத்திரம், இந்து மகா சமுத்திரம், உத்தர மகா சமுத்திரம், தக்ஷணமகா சமுத்திரம் என்று சொல்லப்படும். ஒவ்வொரு கண்டத்திலும் தேசமென்று வழங்கும் சிறு பூபாகங்கள் அநேகம் உள. நாம் வசிக்கும் இடமானது பூமியின் கீழ்ப்பாதியில் உள்ள ஆசியாக் கண்டத்தில் இந்தியா என்னும் தேசமாகும்.

நமது தேசத்திற்குத் தெற்கே யுள்ளது இந்து மகா சமுத்திரம் எனப்படும்.

சிறுவர்களே! நாம் ஆகாய விமான மொன்றில் ஏறிக்கொண்டு



ஆகாய விமானம்

பூமியைச் சுற்றி வருவோமானுல், அநேக ஆயிரம் அடிகள் உயரே சென்றவுடன், நம் கண்களினுல் பல விதமான காட்சிகளைக் காணலாம். முதன் முதலாகப் பூமியின் மட்டமானது மிகவும் மேடுபள்ளமாயிருப்பது தெரியும். தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து வடக்குமுகமாகச் சென்ருல், நமது தேசத்தின் வடக்கு எல்லை



இமயமலைச் சிகரம்

யான இமயமலைக்கு வருவோம். வழியில் அநேக ஆறுகளும், பட்டணங்களும், காடுகளும், மலைகளும் காணப்படுகின்றன. வடக்கே செல்லச் செல்ல உஷ்ணம் குறைவாகவும், குளிர்ச்சி அதிகமாகவும் இருப்பதை உணரலாம். அங்கிருந்து இன்னும் வடக்கே சென்ருல் மத்திய ஆசியாவில் பலமலைகளும், பல ஆறுகளும், பல பீட பூமிகளும் காணப்படும்.



புல்வெளிமைதானம்

இன்னும் வடக்கே சென்ருல் புல் நிறைந்த மிகவும் விசாலமான மைதானங்கள் கண்களுக்குப் புலப்படுகின்றன. அவ்விடத்தில் பெரும்பாலும் ஜனங்கள் ஆடு மாடுகளை மந்தை மந்தையாய் வளர்த்து ஜீவனம் செய்கிருர்கள்.

மேலும் சிறிது வடக்கேசென்ருல் பூமியானது அதி சீதளமாகவும், பனியினுல் மூடப்பட்டும் காணப் படு



எஸ்கிமோ வீடு

கிறது. இவ்விடத்தில் எஸ்கிமோ என்னும்ஜாதியார் பனிக்கட்டிகளால் வீடு கட்டிக்கொண்டு, பிராணிகளின் தோலை உடையாக அணிந்துகொண்டிருப்பதைக் காணலாம்.

இவைகளை யெல்லாம் பார்த்து விட்டு, இன்னும் சிறிது வடக்கே சென்றால் வட துருவத்துக்கு வரலாம். வடதுருவமானது எப்பொழுதும் பனிக் கட்டிகளினால் மூடப்பட்டிருக்கிறது. இங்கு வருஷத்தில் ஆறு மாதம் வெளிச்ச மாகவும், ஆறு மாதம் இருட்டாகவும் இருக்கிறது. இருட்டுக்காலங்களில் அங்கிருக்கும் ஜனங்கள் தெற்கே சென்று விடுகிறார்கள்.

இதனைக்கடந்து அப்புறம் சென்றால் மறுபடியும் ஆசியாவின் பின்புறத்திலுள்ள வடக்கு மகா சமுத்திரத்திற்கு வரலாம். அங்கிருந்து புறப்பட்டுத் தெற்கு முகமாகத் திரும்பினால் மறுபடியும் ஆச்சரியத்தை அனுபவிக்கலாம். திரும்பவும் நேராகச்சென்றால் வட அமெரிக்காவுக்கு வந்து சேருகிறோம். வட ஆசியாவைப்போல இவ்விடத்திலும் பனிக்கட்டிகள் திரள் திரளாகப் பூமியின்மேல் படிந்திருக்கின்றன. இங்கிருந்து தெற்கே சென்றால் கானடா என்னும் தேசத்திலுள்ள அநேக ஆறுகளையும், ஏரிகளையும் காணலாம்.

இன்னும் அதற்குத் தெற்கேசென்றால் ஐக்கியமாகாணங்களுக்கு வந்து சேருகிறோம். இவ்விடத்தில் பெரிய ஆறுகளும், மலைகளும், காடுகளும் இருக்கின்றன. இவ்விடத்தில் குடியிருப்பவர்கள் ஐரோப்பியர்கள். சிலவிடங்களில் அமெரிக்காவின் ஆதிக் குடிகளான செவ்விந்தியர்களைக்காணலாம். ஐக்கியமாகாணங்களின் பலவிடங்களில் ஆப்பிரிக்காவிலிருந்து பல நூற்றாண்டுகளுக்குமுன் கொண்டு வரப்பட்ட நீகிரோஜாதியினர்வசித்து வருவதைப் பார்க்கலாம்.

திரும்பவும் தெற்குநோக்கிப் பிரயாணம் செய்தால் பூமியானது வரவரக்குறுகி இரண்டு பக்கங்களிலும் சமுத்திரங்களால் உட்செல்லப்பட்டு, அமெரிக்காக் கண்டமானது இரண்டாகப்பிரிக்கப்படுவது நன்கு விளங்கும். தெற்கே மெக்ஸிகோ என்னும் தேசம் காணப்படுகிறது.

இன்னும் தெற்கு நோக்கிச் சென்றால் தென்னமெரிக்கா வந்து சேரலாம். அவ்விடத்தில் அடர்ந்த பல பெரிய காடுகள் இருக்கின்றன. உலகத்தில் மிகவும் பெரிதான அமேஜான் என்னும் நதி ஓடுகிறது. கடைசியாகக் கேப் ஹார்ன் என்னும் தென் அமெரிக்காவின் தெற்குக் கோடிமுனைக்கு வருகிறோம்.

இங்கிருந்து அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் வழியாக மத்திய ஆப்பிரிக்காவுக்குச் செல்லுவோம். நடு வழியில் நூற்றுக்கணக்கான தீவுகளைக் காணலாம். மத்திய ஆப்பிரிக்காவில் மலைகள், பீடபூமிகள், ஆறுகள், ஏரிகள், ஏராளமாய் இருக்கின்றன. அவ் விடத்திலுள்ள காட்டு மிருகங்களைக் கவனியுங்கள். (1) காண்டா மிருகம் (2) யானை (3) சிங்கம் முதலியவைகள் மிகுதியாய் இருப்பதைக் காணலாம். இந் நாட்டு ஜனங்கள் கரியநிறமுள்ள நீகிரோவர்கள். இப்பிரதேசத்திலும் அநேக இடங்களில் ஐரோப்பியர்கள் குடியேறியிருப்பதைப் பார்க்கலாம்.

இதற்குச் சிறிது வடக்கே சென்றால், உலகத்திலுள்ள பெரிய நதிகளில் ஒன்றான நைல் நதியைக் காணலாம். இதற்கு மேற்காக ஸாஹரா என்னும் பெரும்பாலைவனம் தோன்றுகிறது. இங்கிருந்து கிழக்கு முக

மாகப் பிரயாணம் செய்தால் இந்து மகாசமுத்திரத்தையும், அதன் மத்தியிலுள்ள பல தீவுகளையும் கடந்து ஆஸ்திரேலியா என்னும் கண்டத்



ஆஸ்திரேலியா தங்கச் சுரங்கம்

துக்கு வரலாம். இதன் மேற்குப் பாகங்களில் அனேக தங்கச் சுரங்கங்கள் இருக்கின்றன. இதில் ஆங்கிலேயர்கள் குடியேறி வசிக்கின்றனர். இங்குச் சில விசித்திரமான மரங்களும், பிராணிகளும் இருப்பதைப் பாருங்கள். ஆஸ்திரேலியாவின் வட பாகத்திலும் ஒரு பெரிய பாலைவனம் இருக்கிறது.

இதுவரையில் நாம் செய்துவந்த சுற்றுப் பிரயாணத்தில் மிகவும் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய கண்டம் ஒன்றை இன்னும் பார்க்கவில்லை. அதுதான் ஐரோப்பாக் கண்டமாகும். மறுபடியும் ஆகாயவிமானத்திற் கிளம்பி அரபிக்கடலைக் கடந்து, ஆப்பிரிக்காவுக்கும்ஐரோப்பாவுக்கும் மத்தியிலுள்ள மத்தியதரைக்கடலுக்குவந்து சேருவோம். இங்கிருந்து கவனித்தால் ஐரோப்பாக் கண்டத்தைக் காணலாம். இதில் மிக்க நாகரிகம்பெற்ற பல தேசங்களிருக்கின்றன. இதன் மத்தியில் ஆல்ப்ஸ் என்னும் உயர்ந்த மலை இருப்பதைப் பாருங்கள். அதனுடைய சிகரங்கள் எப்பொழுதும் பனியினால் மூடப்பட்டிருக்கின்றன. ஐரோப்பாக் கண்டத்தில், பாரிஸ், லண்டன், ம்யூனிக், ரோம், பர்லின், பிட்டோகிராட் முதலிய உலகப் பிரசித்திபெற்ற பெரியநகரங்களைக்காணலாம். இக்கண்டத்தில் பல இடங்களில் பெரிய கைத்தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான பல உலகக் காட்சிகளைப் பார்த்துவிட்டு மறுபடியும் நமது தேசத்திற்குத் திரும்புவோம்.

Printed at the Excelsior Power Press, Madura

٢ أحمد